# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

88வது ஆண்டறிக்கை

2016 - 2017



# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# 88வது ஆண்டறிக்கை 2016–2017

இவ்வாண்டறிக்கை ஏப்ரல் 1, 2016 முதல் மார்ச் 31, 2017 வரையான காலத்திற்குட்பட்டதாகும்

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## ஆண்டறிக்கை 2016–2017

## பொருளடக்கம்


| பகுதி எண். | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | முன்னுரை | 1–2 |
| I. | செயல்பாடுகள் மற்றும் கடமைகள் | 3–5 |
| II. | நேரடித் தெரிவுகள் | 5 |
| III. | தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை | 6 |
| IV. | பணிமாற்றம்/பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல் முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள் ஒழுங்கு முறைகள், தற்காலிக நியமனங்கள் இன்ன பிற | 6–8 |
| V. | இதரத் தேர்வுகள் | 8 |
| VI. | அரசும் தேர்வாணையமும் | 8–13 |
| | ஏற்புரை | 13 |


## பிற்சேர்க்கைகள்


| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| I. | தேர்வாணையத்தில் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கை | 14 |
| II. | வருவாய் மற்றும் செலவினம் | 15 |
| III. | இறுதி முடிவுகள் / நேரடித் தெரிவுகள் | 16–23 |
| IV. | வெளியிடப்பட்ட அறிவிக்கைப் பட்டியல் (நேரடித் தெரிவு) | 24–25 |
| V. | முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வுகள் மற்றும் வாய்மொழித் தேர்வு குறித்த விவரங்கள் | 26–30 |
| VI. | பல்வேறு தேர்வுகளில் தகுதியும் பொருத்தமும் உடைய விண்ணப்பதாரர்கள் இல்லாமை | 31–33 |
| VII. | பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட பதவிகளின் விவரம் | 34–36 |
| VIII. | ஒழுங்குமுறை நடவடிக்கை/மேல்முறையீடு/சீராய்வு மனு/மறு ஆய்வு மனு/பணப்பிடித்தம்/ ஓய்வூதியக் குறைப்பு மற்றும் இது தொடர்பான பிற இனங்கள் | 37–39 |
| IX. | தேர்வாணையத்தின் இசைவு வழங்கப்பட்ட மற்றும் மறுக்கப்பட்ட விவரங்கள் | 40–43 |
| X. | தற்காலிக நியமனங்கள் 24 மாதங்களுக்கு மேல் தொடரப்பட்ட இசைவு அளித்த விவரம் | 44 |
| XI. | தேர்வாணையத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களின் பட்டியல் (1930 முதல்) | 45–50 |
| XII. | கடந்த ஐந்தாண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்தது மற்றும் தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்த நிகழ்வுகள் | 51 |
| XIII. | வரைபடங்கள் | 52–53 |

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

## 2016–2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை

**முன்னுரை:-**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவுக் கூறு 315-ன் படி அமைக்கப்பட்டுள்ளது. தேர்வாணையத்தில் தலைவர் பதவி ஒன்றும், உறுப்பினர் பதவி பதினான்கும் ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். ஆண்டறிக்கை காலத்தில் தலைவரும், பதினான்கு உறுப்பினர்களும் உள்ளனர். இவ்வாண்டறிக்கை காலத்தில் இருந்த தேர்வாணையத்தின் கூட்டமைப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-

| | |
|---|---|
| முனைவர்.க.அருள்மொழி, இ.ஆ.ப. (ஓய்வு) | தலைவர் |
| டாக்டர்.சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச்., | உறுப்பினர் |
| திரு.த.குப்புசாமி, பி.எஸ்.சி., பி.ஜி.எல்., | உறுப்பினர் |
| திரு.க.செல்வமணி, பி.எஸ்.சி., பி.எல்., டி.பி.பி.ஏ., | உறுப்பினர் |
| முனைவர்.ரா.பிரதாப் குமார், எம்.ஏ., எம்.எல்., எம்.பி.ஏ., பி.எச்.டி., | உறுப்பினர் |
| திரு.வெ.சுப்பையா, எம்.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு.சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு.மு.சேதுராமன், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.டபிள்யு., | உறுப்பினர் |
| திரு.ஏ.வி.பாலுசாமி, பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| திரு.மு.மாடசாமி, பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு.வெ.இராமமூர்த்தி, பி.எஸ்.சி., பி.எல்., | உறுப்பினர் |
| முனைவர்.பெ.கிருஷ்ணகுமார், பி.இ., எம்.பி.ஏ., எம்.பில்., எம்.சி.எஸ்டி., (யுஎஸ்ஏ)., பிடிஎப்எல் (மலேசியா)., எம்.ஐ.இஇஇ., பி.எச்.டி., | உறுப்பினர் |
| திரு.அ.சுப்ரமணியன், பி.இ., எம்.ஐ.இ., | உறுப்பினர் |
| திரு.ந.பூ.புண்ணியமூர்த்தி, டி.சி.இ., | உறுப்பினர் |
| முனைவர்.மு.ராசாராம்., இ.ஆ.ப (ஓய்வு) | உறுப்பினர் |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின், 22.12.2016 அன்றைய நீதிப்பேராணையின் எண்கள் 4113, 4161 மற்றும் 4584/2016–ல் பிறப்பித்த உத்தரவின்படியும் மற்றும் கடந்த 09.01.2017 அன்று மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் சிறப்பு விடுப்பு (இ) மனு எண்கள் 81–83/2017–ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படியும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கு நியமிக்கப்பட்ட கீழ்கண்ட தேர்வாணைய உறுப்பினர்களின் நியமனம் இரத்து செய்யப்பட்டது:–

1. முனைவர்.ரா.பிரதாப் குமார், உறுப்பினர்
2. திரு.வெ.சுப்பையா, உறுப்பினர்
3. திரு.சு.முத்துராஜ், உறுப்பினர்
4. திரு.மு.சேதுராமன், உறுப்பினர்
5. திரு.ஏ.வி.பாலுசாமி, உறுப்பினர்
6. திரு.மு.மாடசாமி, உறுப்பினர்
7. திரு.வெ.இராமமூர்த்தி, உறுப்பினர்
8. முனைவர்.பெ.கிருஷ்ணகுமார், உறுப்பினர்
9. திரு.அ.சுப்ரமணியன், உறுப்பினர்
10. திரு.ந.பூ.புண்ணியமூர்த்தி, உறுப்பினர்
11. முனைவர்.மூ.ராசாராம், உறுப்பினர்

## செயலாளர் மற்றும் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்:-

| | |
|---|---|
| திரு.மா.விஜயகுமார், இ.ஆ.ப., (15.11.2012 அன்று பணியேற்றார்) | செயலாளர் |
| திருமதி.வெ.சோபனா, இ.ஆ.ப., (10.10.2012 அன்று பணியேற்றார்) | தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் |

மார்ச் 31, 2017 அன்றுள்ளபடி தேர்வாணையத்தின் பணியாளர் விவரம் பிற்சேர்க்கை 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## பகுதி–1

### செயல்பாடுகள் மற்றும் கடமைகள்:-

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் சட்டப் பிரிவுக் கூறு 320–இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தனது பணிகள் மற்றும் செயல்பாடுகளை ஆற்றுகிறது. பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தெரிவு விதிகள், பணி நியமனம், பதவி உயர்வு மற்றும் பணி மாறுதல் போன்றவற்றில் கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள், அரசு ஊழியர்கள் மீது எடுக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியன தொடர்பாக மாநில அரசுக்கு அறிவுரை வழங்குகிறது. மேலும், மாநில, சார்நிலை மற்றும் அமைச்சுப் பணிகளுக்கு நேரடித் தெரிவுகளுக்கான போட்டித் தேர்வுகள், அரசு ஊழியர்களுக்கான துறைத் தேர்வுகள், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலக் குடிமைப் பணி அதிகாரிகளுக்கான அரையாண்டுத் தேர்வுகள் மற்றும் டேராடூனில் உள்ள இந்திய இராணுவக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் மாணவர்களைச் சேர்ப்பதற்கானத் தேர்வையும் அக்கல்லூரியின் சார்பாக தேர்வாணையம் நடத்துகிறது.

### தேர்வு மற்றும் இதர பணிகள்:-

அறிக்கைக்குரிய ஆண்டில் தேர்வாணையத்தால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம்:-

### I. நேரடி தெரிவுத் தேர்வுகள்:-

#### 1. முதனிலைத் தேர்வுகள்:-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை<br>(தொகுதி-I பணிகள்) | .. | 1 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | .. | 85 |
| விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | .. | 2,23,112 |

#### 2. முதன்மைத் தேர்வுகள்:-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 14 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | .. | 7,518 |
| விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | .. | 17,24,040 |

#### 3. வாய்மொழித் தேர்வுகள்:-

| | | |
|---|---|---|
| தேர்வுகளின் எண்ணிக்கை | .. | 13 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | .. | 626 |
| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 1,262 |

#### 4. இறுதித் தெரிவுகள்:-

| | | |
|---|---|---|
| முற்றிலுமாக இறுதி முடிவு செய்யப்பட்ட தெரிவுகளின் எண்ணிக்கை | .. | 17 |
| காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | .. | 6,991 |
| இறுதியாகத் தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 6,810 |

## II. இதரத் தேர்வுகள்:-

### 1. துறைத் தேர்வு – 2016:-

| | | |
|---|---|---|
| விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | .. | 1,78,674 |
| தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | .. | 1,24,664 |
| தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | .. | 81,712 |

### 2. அரையாண்டுத் தேர்வுகள்:-

| | | |
|---|---|---|
| ஏப்ரல் 2016 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 59 |
| அக்டோபர் 2016 தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 35 |

## III. பிற பணிகள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | பணி மாறுதல் அல்லது பதவி உயர்வின் மூலம் நியமனம் | .. | 585 நபர்கள் |
| 2. | கல்வித் தகுதி/வயது தொடர்பான விதிகளைத் தளர்த்தி பணிமாறுதல் அல்லது பதவி உயர்வு மூலம் நியமனத்திற்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | .. | 6 |
| 3. | ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள்: தேர்வாணையத்தின் கருத்துக்கள் அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | .. | 365 |
| 4. | அமைச்சுப் பணியில் ஒரு அலகு துறையிலிருந்து மற்றொரு அலகுத் துறைக்கு ஒரு வழி மாறுதல் அளித்தல் | .. | 74 |
| 5. | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் 10% மற்றும் 20% இடஒதுக்கீட்டில் விதி 16(b)ன் இசைவு வழங்கப்பட்டநேர்வுகள். | | 143 நபர்கள் |
| 6. | ஒழுங்குமுறை விதி 16(b)–ன் பிற்பகுதியின் கீழ் இசைவு அளிக்கப்பட்டவை (விவரங்கள் பிற்சேர்க்கை 9–ல் கொடுக்கப்பட்டுள்ளன) | .. | 686 நபர்கள் |
| 7. | வரவு மற்றும் செலவு | | (ரூபாய் ஆயிரங்களில்) |
| | வரவு | .. | 1,33,913 |
| | செலவு | .. | 6,01,292 |
| | (விவரங்கள் பிற்சேர்க்கை II–ல் கொடுக்கப்பட்டுள்ளன) | | |

## 8. அறிவிக்கைகள்:-

37 வகையான பதவிகளுக்கான 6,434 காலிப்பணியிடங்களுக்கு 19 அறிவிக்கைகள் வெளியிடப்பட்டதில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 20,57,905 ஆகும்.

(விவரங்கள் பிற்சேர்க்கை IV–ல் கொடுக்கப்பட்டுள்ளன)

குறிப்பு:- மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை விளக்கும் வரைபடங்கள் பிற்சேர்க்கை XIII–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 9. சீர்திருத்த நடவடிக்கைகள்/மறு சீரமைப்புகள்:-

**(1)** கூடுதல் பயன்பாடுகளுடன் மேம்படுத்தப்பட்ட விண்ணப்பதாரர்களின் தன்விவரப் பக்கம் **[Candidates' Enhanced Dash Board]:-**

விண்ணப்பதாரர்கள் தங்களுக்கான பிரத்யேக தன்விவரப்பக்கம் ஒருமுறை பதிவு முறையில் பதிவு செய்துகொள்வதற்காக தனித்துவ உள்ளீட்டு குறியீடு (Login id) மற்றும் கடவுச்சொல்லுடன் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தன்விவரபக்கத்தில் கூடுதல் வசதியாக தற்போது, விண்ணப்பதாரர்கள் தாங்கள் 2012–ம் ஆண்டு முதல் தேர்வாணையத்திற்குச் சமர்பித்துள்ள விண்ணப்பங்கள் (Application History) பற்றிய விவரங்களான, அறிவிக்கை எண், விண்ணப்பித்துள்ள பதவியின் பெயர், பதிவு எண், விண்ணப்ப எண் மற்றும் விண்ணப்பித்த தேதி ஆகியன பட்டியலிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இவ்விவரங்களை தேர்வாணைய இணையதளங்கள் வாயிலாக விண்ணப்பதாரர்கள் 24x7 என்னும் முறையில் எப்போது விரும்பினாலும் பார்த்துக் கொள்ளலாம். இதன் மூலம் தாங்கள் விண்ணப்பித்துள்ள தேர்விற்கான விண்ணப்ப எண் மற்றும் பதிவு எண் ஆகியவற்றை தேர்வாளர்கள் தவறவிட்டிருப்பினும் தாங்களாகவே தெரிந்துகொள்ள ஏதுவாக இந்த கூடுதல் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் தேர்வர்களின் நிலையினை அவர்களாகவே தெரிந்துகொள்ளும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

**(2)** தேர்வாணையத்தின் பட்டய, பட்டதாரி மற்றும் முதுநிலை பட்டதாரிக்கான போட்டித் தேர்வுக்கான பாடதிட்டமானது கடைசியாக 2000 மாவது ஆண்டில் மாற்றியமைக்கப்பட்டது. நீண்டகால இடைவெளிக்கு பிறகு இந்த ஆண்டறிக்கை ஆண்டில் இப்பாடத்திட்டங்கள் தற்போதைய பாடத் திட்டத்திற்கேற்ப புதுப்பிக்கப்பட்டது.

**(3)** இந்த ஆண்டறிக்கை ஆண்டில் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையானது இதுவரை ஏற்பட்ட மாற்றங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாகவும் தற்போதைய தேவைக்கேற்பவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## பகுதி-II

### நேரடித் தெரிவுகள்

அறிக்கைக்குரிய காலத்தில், தேர்வாணையம் 6991 காலிப் பணியிடங்களுக்கான 17 தெரிவுகளை முழுமையாக முடிவு செய்து, இறுதியாக 6810 விண்ணப்பதாரர்களை பணிநியமனத்திற்கு தேர்ந்தெடுத்தது. இறுதி முடிவு செய்த 17 தெரிவுகளின் புள்ளி விவரங்கள் பிற்சேர்க்கை–III–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

### முதனிலைத் தேர்வு:-

அறிக்கைக்குரிய காலத்தில், 85 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்காக தொகுதி-1 பணிகளுக்கான முதனிலைத் தேர்வினை தேர்வாணையம் நடத்தியது. இத்தேர்விற்கு 2,23,112 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

### முதன்மைத் தேர்வு:-

அறிக்கைக்குரிய காலத்தில், பல்வகைப் பணிகளில் 7,518 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 14 முதன்மைத் தேர்வுகளை தேர்வாணையம் நடத்தியது. இம்முதன்மை தேர்வுகளுக்கு 17,24,040 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தனர்.

### நேர்முகத் தேர்வு:-

அறிக்கைக்குரிய காலத்தில், 626 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான 13 தெரிவுகளுக்கு நேர்முகத் தேர்வுகளைத் தேர்வாணையம் நடத்தியது. தேர்வாணையம், 24 வேலை நாட்களில் நேர்முகத் தேர்வுகளை முற்பகல் மற்றும் பிற்பகல் என இரு அமர்வுகளாக நடத்தியது. சில நாட்களில் அதிகளவாக 7 குழுமங்கள் முற்பகலிலும் பிற்பகலிலும் இயங்கின. நடப்பு ஆண்டில், 24 வேலை நாட்களில் மொத்தம் 182 குழுமங்கள் அமைக்கப்பட்டு 1262 விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டனர்.

அறிக்கைக்குரிய காலத்தில் நடத்தப்பட்ட முதனிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வுகளின் விவரங்கள் பிற்சேர்க்கை V–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# பகுதி-III

## தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர்கள் இல்லாமை:-

அறிக்கைக்குரிய காலத்தில் தகுதியும் பொருத்தமும் உள்ள விண்ணப்பதாரர்கள் கிடைக்காமையால் நிரப்பப்படாத 64 காலிப் பணியிடங்கள் விவரம் பின்வருமாறு:–

தொகுதி–IV (2013–2015)–ல் தட்டச்சர்–8, மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்–42, ஒருங்கிணைந்த பொறியாளர் பணி தேர்வு (2012–2014)–ல் 1 மற்றும் கிராம நிர்வாக அலுவலர் (2014–2015)–ல் 13.

வகுப்பு வாரியான விவரங்கள் பிற்சேர்க்கை VI–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

# பகுதி-IV

**பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல், ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல்முறையீடுகள், மனுக்கள், சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள், தற்காலிக நியமனங்கள் இன்ன பிற:**

## 1. பணிமாறுதல் மற்றும் பதவி உயர்வு மூலமாகத் தெரிவு:-

அறிக்கைக்குரிய காலத்தில் தொடர்புடைய சார் நிலைப்பணிகளிலிருந்து மாநிலப் பணிகளுக்கு பணிமாற்றம் மூலம் தெரிவு செய்தல் மற்றும் மாநில பணிகளில் பதவி உயர்வு மூலம் தெரிவு செய்தல் ஆகிய பொருள் குறித்த குறிப்பீடுகளை தேர்வாணையம் ஆய்வு செய்து 15 பணிகளில் பணியமர்த்தத் தகுதியும், பொருத்தமும் உடைய 585 அலுவலர்களைத் தெரிவு செய்தது. இதன் விவரம் பிற்சேர்க்கை VII–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. ஒழுங்குமுறை நடவடிக்கை இனங்கள், மேல்முறையீடுகள், மனுக்கள் மற்றும் பிற:-

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | (i) | அறிக்கைக்குரிய காலத்தில் ஆய்ந்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 548 |
| | (ii) | (அ) தேர்வாணையம் தீர்வு செய்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 302 |
| | | (ஆ) தேர்வாணையத்தின் ஆய்வில் உள்ள நேர்வுகளின் எண்ணிக்கை | : | 61 |
| | | (இ) உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அனுப்புமாறு அரசுக்குத் திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 25 |
| | | (ஈ) ஆவணங்கள் கோரி அரசுக்குத் திருப்பப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 161 |
| | (iii) | தண்டனையில் மாற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 49 |
| ஆ. | (i) | தேர்வாணையத்தின் கருத்து அரசுக்குத் தெரிவிக்கப்பட்ட நேர்வுகளின் எண்ணிக்கை | : | 365 |
| | | (அ) அரசு ஆணை பிறப்பித்த நேர்வுகளின் எண்ணிக்கை | : | 192 |
| | | (ஆ) அரசு ஆணை பிறப்பிக்க வேண்டிய நேர்வுகளின் எண்ணிக்கை | : | 173 |

ஒழுங்கு நடவடிக்கை, மேல்முறையீட்டு மனு, சீராய்வு மனு, மறுஆய்வு மனு, பணப்பிடித்தம் ஓய்வூதியம் குறைப்பு ஆகியவைகளில், அலுவலர்கள் நேர்மைக்குப் புறம்பாக நடந்து கொண்ட வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் வேறு வகையில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் கொண்ட நேர்வுகள் என 365 நேர்வுகளின் விவரம் பிற்சேர்க்கை-VIII–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. சட்டமுறை விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் பிற:–

மாநில, சார்நிலை, அமைச்சு மற்றும் தலைமைச் செயலக பணிகளில் நியமனம் செய்ய இசைவு கோரப்பட்ட 686 நிகழ்வுகளில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954–ல் ஒழுங்குமுறை விதி 16(b)–ன் பிற்பகுதியின்படி, தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்டது.

இசைவு அளிக்கப்பட்ட பதவிகள் மற்றும் பணிகளின் விவரங்கள் துறை வாரியாக பிற்சேர்க்கை IX–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 4. தற்காலிக நியமனங்கள்:-

தற்காலிக நியமனம் நீட்சிசெய்யப்பட்ட நேர்வுகளில் தேர்வாணையத்தின் இசைவு அளிக்கப்பட்ட விவரங்கள் பின்வருமாறு (பிற்சேர்க்கை–X):

| காலம் | இசைவு அளிக்கப்பட்டது | | இசைவு மறுக்கப்பட்டது | |
|---|---|---|---|---|
| | மாநிலப் பணி | சார்நிலை/ அமைச்சுப் பணி | மாநிலப் பணி | சார்நிலை/ அமைச்சுப் பணி |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 3 மாதங்களுக்கு மேல் 12 மாதங்களுக்குள் | – | – | – | – |
| 12 மாதங்களுக்கு மேல் 18 மாதங்களுக்குள் | – | – | – | – |
| 18 மாதங்களுக்கு மேல் 24 மாதங்களுக்குள் | – | – | – | – |
| 24 மாதங்களுக்கு மேல் | – | – | – | – |
| மொத்தம் | – | – | – | – |

## 5. தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளுள் விதி 20(a)(iii)–இன் படி இசைவு அளிக்கப்பட்டவை:–

தமிழ்நாடு அமைச்சுப் பணி சிறப்பு விதிகளுள் விதி 20(a)(iii)–இன் படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் ஒரு துறை அலகிலிருந்து மற்றொரு துறை அலகிற்கு 74 பணியாளர்களுக்கான நிரந்தர மாறுதலுக்கு தேர்வாணையம் இசைவளித்தது. இரண்டு நேர்வில் இசைவு மறுக்கப்பட்டது.

## 6. விதிகள் பிறப்பித்தல் மற்றும் திருத்தம் வெளியிடல்:–

ஆண்டறிக்கை காலத்தில், 52 நேர்வுகளில் சட்டமுறை விதிகள் அல்லது திருத்தங்கள் அரசால் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றுள், 31 நேர்வுகளில், விதிகள் வெளியிடப்படும் முன் தேர்வாணையம் கலந்தாலோசிக்கப்பட்டது. 2 நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்து கேட்டறியப்படவில்லை. இருப்பினும், அந்த 2 நேர்வுகளில் தேர்வாணைய உள்ளீட்டு எல்லைக்கு உட்படாத பதவிகளுக்கு உரியதாகவோ அல்லது இந்திய அரசியலமைப்புசட்ட பிரிவுக்கூறு 320(3)-ன்படி தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்கப்பட தேவையில்லாததாகவோ அமைந்துள்ளன.

## 7. விதி தளர்வு:–

ஆண்டறிக்கை காலத்தில், 6 நேர்வுகளில் வயது அல்லது கல்வித் தகுதி குறித்த சட்ட முறை விதிகள் அரசால் தளர்த்தப்பட்டன.

* * * * * * * * * * * * * * *

## பகுதி–ஏ

## இதரத் தேர்வுகள்

### I. துறைத் தேர்வுகள்:–

2016-ஆம் ஆண்டு மே மற்றும் டிசம்பர் திங்களில் துறைத் தேர்வுகள் நடைபெற்றன, மொத்தம் 301 தேர்வுகள் நடத்தப்பட்டன. அத்தேர்வுகளுக்கு 1,78,674 நபர்கள் விண்ணப்பித்தனர். அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண். | விவரம் | மே–2016 | டிசம்பர்–2016 |
|---|---|---|---|
| 1. | மொத்தப் பாடங்களின் எண்ணிக்கை | 152 | 144 |
| 2. | தேர்வுத் தாள்களின் எண்ணிக்கை | 155 | 146 |
| 3. | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | 1,07,220 | 71,454 |
| 4. | தேர்வு எழுதியவர்களின் எண்ணிக்கை | 73,807 | 50,857 |
| 5. | தேர்ச்சி பெற்றவர்களின் எண்ணிக்கை | 49,285 | 32,427 |
| 6. | தேர்ச்சி விகிதம் | 66.77 | 63.76 |

### II. அரையாண்டுத் தேர்வுகள்:–

இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, இந்திய வனப் பணி மற்றும் மாநிலப் பணி அலுவலர்களுக்கு முதல்நிலை தமிழ் மொழித் தேர்வுகள் அடங்கிய அரையாண்டுத் தேர்வு ஏப்ரல் 2016 மற்றும் செப்டம்பர் 2016-இல் நடத்தப்பட்டன. இத்தேர்வுகளில் முறையே 59 விண்ணப்பதாரர்களும் 35 விண்ணப்பதாரர்களும் அனுமதிக்கப்பட்டனர்.

### III. இந்திய அரசின் இராணுவக் கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கான தேர்வு:–

டேராடூனில் உள்ள இந்திய அரசின் இராணுவ கல்லூரியால் நிர்வகிக்கப்படும் பள்ளியில் சேருவதற்கானத் தேர்வை அக்கல்லூரியின் சார்பாக 2016–ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசம்பர் மாதங்களில் தேர்வாணையம் நடத்தியது. அவற்றில் 167 மாணவர்கள் ஜூன் மாதத்திலும் 127 மாணவர்கள் டிசம்பர் மாதத்திலும் கலந்துகொண்டனர்.

## பகுதி –VI

## அரசும் தேர்வாணையமும்

### அ. தேர்வாணையத்தின் கருத்திலிருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்தவை:–

அறிக்கைக்குறிய காலத்தில், தேர்வாணையத்தின் கருத்துரையில் இருந்து ஒன்பது நேர்வுகளில் மாறுபட்டு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதன் விவரங்கள் பின்வருமாறு:-

#### நேர்வு -1

#### அரசாணை (3D) எண்.14, உள் (காவல் XVIII) துறை, நாள் 24.02.2016

திருமதி.எஸ்.கலா, உதவி இயக்குநர், தடயவியல் அறிவியல் துறை, சென்னை அவர்கள் குற்றநிகழிடத்திற்கு வரத்தவறியது காரணமாக இயக்குநர் (பொறுப்பு) தடயவியல் அறிவியல் துறை அவர்களால் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. மேல்முறையீட்டாளர் அளித்த தன்னிலை விளக்கத்திற்கு பின் தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபணமாவதாக முடிவு செய்து, இயக்குநர் (பொறுப்பு), தடயவியல் அறிவியல் துறை அவர்களால் “ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு நிறுத்தம்” எனும் தண்டனை வழங்கப்பட்டது. இத்தண்டனையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் அரசுக்கு மேல்முறையீடு சமர்ப்பித்தார். அரசு, அம்மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களை

தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அதன் மீது 1954–ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள் ஒழுங்குமுறை 18(1)(a)–ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

இக்கோப்பின் பொருண்மைகளை/நிகழ்வுகளை கருத்தில் கொண்டு, அன்னாருக்கு தண்டனையாக ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஓராண்டுக்கு நிறுத்தம் செய்யலாம் என்பதே சரியானதும் மற்றும் முறையானதுமாகும் என்ற கருத்தினையே தேர்வாணையம் தனது ஆலோசனையாக அரசுக்கு வழங்கியது.

திருமதி.எஸ்.கலா, துணை இயக்குநர், தடயவியல் அறிவியல் துறை அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனையை மேலும் பகுதியாக குறைத்து "கண்டனம்" எனும் தண்டனை வழங்குவதே நீதிக்குட்பட்டது என அரசு முடிவு செய்து, அரசாணை (3D) எண்.14, உள் (காவல் XVIII) துறை, நாள் 24.02.2016–ல் அரசு ஆணையிட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில் அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

**நேர்வு – 2**

**அரசாணை (நிலை) எண்.255, உள் (சிறை.2) துறை, நாள் 01.03.2016**

திருமதி.வி.ஜெயமணி, இரண்டாம் நிலை காவலர், சேலம் அவர்களின் பணியில் காணப்பட்ட சில குறைபாடுகள் காரணமாக தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(a)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது. நிரூபணமான குற்றச்சாட்டிற்கு தண்டனையாக சேலம் மத்திய சிறைக் கண்காணிப்பாளர் அவர்களால் "ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகள் நிறுத்தம்" செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. அதனை எதிர்த்து மனுதாரர் அளித்த மேல்முறையீடு சிறைத்துறைத் துணைத் தலைவரால் பரிசீலிக்கப்பட்டு, மேற்படி தண்டனை ரத்து செய்யப்பட்டு, அன்னாரின் "ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஓராண்டு காலம் நிறுத்தம்" என்று மாற்றி ஆணையிடப்பட்டது. இத்தண்டனையை எதிர்த்து மனுதாரர் சிறைத் துறைத் தலைவருக்கு சமர்ப்பித்த சீராய்வு மனு நிராகரிக்கப்பட்டு, சிறைத்துறைத் துணைத் தலைவரால் வழங்கப்பட்ட தண்டனை உறுதி செய்து ஆணையிடப்பட்டது. மனுதாரர் சிறைத்துறைத் துணைத் தலைவரால் வழங்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யக்கோரி அரசுக்கு மனுவினை சமர்ப்பித்தார். அரசு, அம்மனு தொடர்பான ஆவணங்களைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறை விதிகளில், விதி 19–ன் கீழ் கோரியது.

தேர்வாணையம் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தண்டனையான அடுத்த ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஓராண்டு காலத்திற்கு நிறுத்தம் என்பதை முழுவதுமாக ரத்து செய்து மனுவினை ஏற்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

அரசு மனுதாரர் திருமதி.வி.ஜெயமணி, என்பவருக்கு சென்னை சிறைத்துறைத் தலைவர் (பெண்கள் சிறை) அவர்களால் வழங்கப்பட்ட தண்டனையான அடுத்த ஊதிய உயர்வு ஒரு வருடத்திற்கு திரண்ட பயனின்றி தள்ளிவைக்கப்படுகிறது என்ற தண்டனையை குறைத்து "கண்டனம்" என்ற தண்டனை வழங்கலாம் என முடிவு செய்து அரசாணை (நிலை) எண்.255, உள்(சிறை.2) துறை, நாள் 01.03.2016–ல் ஆணையிட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில் அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

**நேர்வு – 3**

**அரசாணை (டி) எண்.73, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 07.04.2016**

திரு. M. சேகரன், உதவி இயக்குநர், முன்னாள் உறுப்பினர் – செயலாளர் (பொ) – கோயம்புத்தூர், உள்ளாட்சி திட்டக் குழுமம் என்பவர் தனக்கு வழங்கப்பட்ட "கண்டனம்" எனும் தண்டனையினை எதிர்த்து அளித்த மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களைத் தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 24.11.2014 நாளிட்ட கடிதத்தில் திரு.M.சேகரன், உதவி இயக்குநர் அவர்களால் 27.01.2011 அன்று அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவில் கருத்துக்கள் எதுவும் பரிசீலனைக்குரியதாக இல்லை. எனவே அன்னாரது மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து, அன்னாருக்கு வழங்கப்பட்ட "கண்டனம்" எனும் தண்டனையினை உறுதி செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு, அரசாணை (டி) எண்.73, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 07.04.2016–ல் கோப்பினை முன்கூட்டியே முடிப்பதற்கு உயர் அதிகாரியின் அறிவுறுத்தலை பின்பற்றியது தவிர வேறு எந்த உள்நோக்கமும் இல்லாத காரணத்தினாலும், மேலும் மனுதாரர் முழு விவரங்கள் அடங்கிய அன்னாரது விண்ணப்பத்தினை மீள சமர்ப்பிக்க இயலும் என்பதனாலும் திரு.M.சேகரன், உதவி இயக்குநர், நகர ஊரமைப்புத் துறை அவர்களால் 27.01.2011 அன்று அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை ஏற்க முடிவு செய்து அன்னாருக்கு வழங்கப்பட்ட ''கண்டனம்'' எனும் தண்டனையினை இரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு அரசு தேர்வாணையக் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

**<u>நேர்வு – 4</u>**

**<u>அரசாணை (2D) எண்.206, உள் (காவல்.2) துறை, நாள் 01.04.2016</u>**

இவ்வழக்கில் திரு.ஈ.பெருமாள், சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) என்பவர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி வளாகத்தில் மாணவர்களுக்கிடையே நடைபெற்ற மோதலை தடுக்காமல் தனது கடமையிலிருந்து தவறி செயல்பட்டார் என்ற காரணத்திற்காக தமிழ்நாடு காவல் துறை சார்நிலை பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 3(b)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.200/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்ய உத்தேச முடிவெடுத்து தேர்வாணையத்தின் கருத்துக்களை அரசு கோரியது.

தேர்வாணையம் தனது 25.07.2014 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு கருத்துக்களை வழங்கியது.

''இவ்வழக்கில், விசாரணை அலுவலர் தனது விசாரணை அறிக்கையில் குற்றச்சாட்டு எண்.2 நிரூபணமாகிறது என்றும் குற்றச்சாட்டு எண்கள் 1, 3 மற்றும் 4 ஆகியவை நிரூபணமாகவில்லை என்றும் தெரிவித்துள்ளார், ஒழுங்கு நடவடிக்கை அதிகாரி, விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு எண்கள் 1, 2-க்கான முடிவுகளை ஏற்றுக்கொள்வதாகவும், குற்றச்சாட்டு எண்கள் 3, 4-க்கான முடிவுகளிலிருந்து மாறுபட்டு அதற்கான காரணமாக குற்ற அலுவலர் மைய வாயில் அருகே பணியில் இருந்த நிலையில் சட்ட விரோதமாக கூடிய மாணவர்களை தடுக்காமல் இருந்தது மற்றும் கைது செய்து மோதலை தடுக்காதது என்பதை தெரிவித்து, கூடுதல் விளக்கம் கோரப்பட்டது. குற்ற அலுவலர், தனது விளக்கத்தில் திரு.K.நாராயணமூர்த்தி, துணை கண்காணிப்பாளர் மற்றும் திரு.சேகர் பாபு, ஆய்வாளர் ஆகியோருக்கு 'கண்டனம்' என்ற தண்டனையே வழங்கப்பட்டுள்ள நிலையில் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை இரத்து செய்யுமாறு கோரியுள்ளார். குற்ற அலுவலர் சிறப்பு சார் ஆய்வாளராக பணிபுரிந்து வரும் நிலையில் காவல் ஆணையர் மற்றும் காவல் உதவி ஆணையருக்கிடையே நடைபெற்ற உரையாடல் குறித்து அறிந்திருக்க முடியாது. அரசின் உத்தேச முடிவு குற்றத்தின் தன்மைக்கு அதிகமானதாகவே தேர்வாணையம் கருதுகிறது. இவ்வழக்கின் உடன் குற்ற அலுவலர்களான காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோருக்கு 'கண்டனம்' எனும் தண்டனை வழங்கப்பட்டுள்ள நிலையில், குற்ற அலுவலருக்கு வழங்க உத்தேசித்திருக்கும் தண்டனையானது குற்றத்தின் தன்மைக்கு அதிகமானதாகவே தேர்வாணையம் கருதுகிறது. எனவே குற்ற அலுவலருக்கு வழங்க உத்தேசித்துள்ள தண்டனையை ரத்து செய்யலாம் என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகிறது''.

மீண்டும் அரசு, தனது 24.02.2015 நாளிட்ட கடிதத்தில் தேர்வாணையத்தின் திருத்திய கருத்துக்களைக் கோரியது. தேர்வாணையம் தனது 10.09.2015 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே தெரிவித்த கருத்துக்களை உறுதிபடுத்தி ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை (2D) எண்.206, உள் (காவல்.2) துறை, நாள் 01.04.2016-ல் அன்னாருக்கு ஏற்கனவே வழங்க உத்தேசித்த தண்டனையான ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.200/- வீதம் இரண்டு ஆண்டுகளுக்குப் பிடித்தம் என்பதை உறுதி செய்து அரசாணை வெளியிட்டது. இவ்வாறாக திரு.ஈ.பெருமாள், சிறப்பு உதவி ஆய்வாளர் (ஓய்வு) என்பவரின் குற்ற வழக்கு தொடர்பாக அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

## நேர்வு – 5

### அரசாணை (2ப) எண்.58, பொது (Special.A) துறை, நாள் 26.06.2009 மற்றும் அரசுக் கடித எண் 7035/A6/1997–67, பொது (Special-A) துறை, நாள் 11–04–2016.

திரு.சி.ராஜாமணி (Senior), என்பவர் மாட்ட வருவாய் அலுவலராக பணிபுரிந்தபோது தனது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் சொத்துக்கள் வாங்கியது குறித்து உரிய உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவிக்க தவறியது தொடர்பாக, அவர்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், அன்னாருக்கு 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனையுடன் 2/3 பங்கு ஓய்வூதியத்தை வழங்கலாம் என்றும், அவரது பணிக்கொடை முழுவதும் பிடித்தம் செய்யலாம் என்ற உத்தேச முடிவின் மீது தேர்வாணையத்தின் கருத்தினை, 1954– ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(b)(iii)-ன் கீழ் அரசு கோரியது.

தேர்வாணையம், அன்னாருக்கு 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனை வழங்கி, அவரது பணிக்கொடை பிடித்தம் ஏதும் செய்யாமல், அன்னாரது அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியத்தில் 2/3 பங்கு ஓய்வூதியம் வழங்கலாம் என்று தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாருக்கு 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனை மற்றும் 2/3 பங்கு ஓய்வூதியம் வழங்கலாம் என்றும், அவரது பணிக்கொடை முழுவதும் பிடித்தம் செய்யலாம் என்றும், அரசாணை (2ப) எண்.58, பொது (Special.A) துறை, நாள் 26.06.2009–ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு, அரசு, தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

## நேர்வு – 6

### அரசாணை (ப) எண்.440, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 17.03.2016

மரு.கே.இராஜேந்திரன், திருச்சி மாவட்டத்தில், பிரகாம்பி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணியாற்றியபோது, தன்னிச்சையாக பணிக்கு வராத காரணத்தால், அன்னார்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி 17(b)-ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் முடிவில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக அன்னாருக்கு 'கட்டாய ஓய்வு' என்ற தண்டனை வழங்கலாம் என்ற அரசின் உத்தேச முடிவின்மீது தேர்வாணையத்தின் கருத்தினை, 1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(b)(iii)-ன் கீழ் அரசு கோரியது.

தேர்வாணையம் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் அளித்த கூடுதல் விளக்கத்தினை அனுமதிக்கலாம் என்றும், அரசு உத்தேசித்துள்ள 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனையைக் கைவிடலாம் என்றும் தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது.

ஆனால், அரசு, குற்ற அலுவலர் தனது கூடுதல் விளக்கத்தில், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதைக் குறிப்பிட்டு, மீண்டும் தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினை அளிக்குமாறு கோரியது.

தேர்வாணையம், 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனையைக் கைவிடலாம் என்றும், அன்னாரது விடுப்புக் காலத்தை பணிக்காலமாக கருதலாம் என்றும் முன்பு அளித்த கருத்தினையே, மீண்டும் அரசுக்கு வழங்கியது.

ஆனால், அரசு, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் தனது விளக்கத்திலும், விசாரணை அறிக்கையின் மீதான கூடுதல் விளக்கத்திலும் அன்னார் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், மேலும் பத்து ஆண்டுகள் தன்னிச்சையாகப் பணிக்கு வராதது நிரூபணமாகியுள்ளதைக் கருத்தில் கொண்டும், அன்னாருக்கு வழங்க உத்தேசித்துள்ள தண்டனையான 'கட்டாய ஓய்வு' எனும் தண்டனையை அரசாணை (ப) எண்.440, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள் 17.03.2016–ன் மூலம் வழங்கி ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு, அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

## நேர்வு – 7

### அரசாணை (2ப) எண்.111, உள் (காவல் IV அ)–த் துறை, நாள் 23.02.2016

திரு.இரா.மதன்மோகன், முன்னாள் காவல் துணை கண்காணிப்பாளர் (ஓய்வு) என்பவர்மீது தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளில், விதி 9-ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் அன்னாரது ஓய்வூதியத்திலிருந்து மாதம் ரூ.400/- வீதம் இரண்டு வருடங்களுக்கு பிடித்தம் செய்யலாம் என்று அரசு உத்தேச முடிவு செய்து, அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை, 1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள் ஒழுங்குமுறை 18(1)(C)-ன் கீழ் அரசு கோரியது.

தேர்வாணையம், அன்னாருக்கு வழங்க உத்தேசித்துள்ள தண்டனையான மாதம் ரூ.400/–வீதம் இரண்டு வருடங்களுக்கு பிடித்தம் செய்யலாம் என்ற அரசின் உத்தேச தண்டனையை கைவிடலாம் என தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது.

ஆனால், அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாரின் ஓய்வூதியத்திலிருந்து ரூ.400/- வீதம் இரண்டாண்டுகளுக்கு பிடித்தம் செய்யலாம் என்ற தண்டனையை, உறுதிசெய்து அரசாணை (2ப) எண்.111, உள் (Pol.IV A)-த் துறை, நாள் 23.02.2016-ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

## நேர்வு – 8

### அரசாணை (2ப) எண்.402, உள் (காவல் 2) துறை, நாள் 22.08.2016

இவ்வழக்கில், திரு.L.M.சந்திரசேகர், காவல்துறை துணை கண்காணிப்பாளர் (தற்காலிக பணிநீக்கம் மற்றும் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்படவில்லை) மீது அவரது பணியில் காணப்பட்ட குறைபாடுகளுக்காக ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, அன்னாருக்கு ‘‘கட்டாய ஓய்வு’’ எனும் தண்டனை வழங்க அரசு உத்தேசித்து தேர்வாணையத்தின் கருத்தினை அதன் ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(i)(b)(iii)-ன் கீழ் கோரியது.

குற்ற அலுவலர் தனது ஓய்வு பெறும் வயதை அடைந்துள்ள நிலையில் (31.12.2013) அன்னார் மீது தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கையை தொடருமாறு அரசுக்கு தேர்வாணையம் தனது ஆலோசனையை வழங்கியது.

அரசு மீண்டும் நவம்பர் 2014-ல் குற்ற அலுவலர் கடமை தவறியமையை குறித்து விரிவாக சுட்டி காட்டி, தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைசெயலக அறிவுரைகள் 95(a)-ன் கீழ் குற்ற அலுவலர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக தேர்வாணையத்தின் திருத்திய கருத்தினை கோரியது.

தேர்வாணையம் அரசின் விரிவான விளக்கத்தினை ஆய்வு செய்து, அதன் முந்தைய கருத்தினையே வலியுறுத்தி, குற்ற அலுவலர் மீது தமிழ்நாடு ஓய்வூதிய விதிகளின் கீழ் ஒழுங்கு நடவடிக்கையினை தொடருமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், அரசு விசாரணை அலுவலரின் விசாரணை அறிக்கையினை ஏற்றுக் கொண்டு நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக குற்ற அலுவலருக்கு ‘‘கட்டாய ஓய்வு’’ எனும் தண்டனை வழங்கி அரசாணை (2டி) எண்.402, உள் (காவல் 2) துறை, நாள் 22.08.2016-ன் வாயிலாக அரசாணை வெளியிட்டுள்ளது.

இவ்வாறாக, அரசு தேர்வாணையம் வழங்கியுள்ள கருத்திலிருந்து மாறுபட்டு அரசாணை பிறப்பித்துள்ளது.

## நேர்வு – 9

### அரசாணை (2ப) எண்.24, உள் (காவல் 2) துறை, நாள் 23.01.2017

திரு.P.முருகேசன், துணை காவல் கண்காணிப்பாளர் (தற்காலிக பணி நீக்கம்) என்பவர் கடவுச்சீட்டு வழங்குவதற்குரிய கள விசாரணை மேற்கொள்ள தவறியமைக்காக அன்னார் மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில், விதி 17(b)-ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்கு தண்டனையாக அவருக்கு ‘கட்டாய ஓய்வு’ வழங்கலாம் எனும் அரசின் உத்தேச தண்டனையின் மீது, அரசு, 1954-ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகளுள், ஒழுங்குமுறை 18(1)(b)(iii)-ன் கீழ் தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது.

அரசின் உத்தேச முடிவான 'கட்டாய ஓய்வு' என்ற தண்டனை அதிகப்படியாக உள்ளது என தேர்வாணையம் கருதி அன்னாரை ஓய்வு பெற அனுமதித்து, ஓய்வூதிய விதிகளின் கீழ் தண்டனை வழங்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால், தேர்வாணையத்தின் கருதிலிருந்து மாறுபட்டு, அரசு அன்னாருக்கு 'கட்டாய ஓய்வு' எனும் அரசின் உத்தேச தண்டனையினையே உறுதி செய்து அரசாணை (2ப) எண்.24, உள் (காவல் 2) துறை நாள். 23–01–2017ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

இவ்வாறு, அரசு ஒன்பது நேர்வுகளில் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு ஆணை பிறப்பித்துள்ளது.

**ஆ. தேர்வாணையத்துடன் கலந்தாலோசிக்கப்படாமை:–**

**- ஏதுமில்லை -**

**இ.** அரசின் கொள்கை தொடர்புடைய விவகாரங்கள் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர, தேர்வாணையத்தின் ஆலோசனைகளை விட்டு விலகி அரசு ஆணையிட்டுள்ளது என்பதை குறிப்பிடுவதோடு எதிர்காலத்தில் இது தொடராது என்று தேர்வாணையம் நம்புகிறது. கடந்த ஐந்தாண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்ததும், தேர்வாணையத்தை கலந்தாலோசிக்காமல் அரசு முடிவெடுத்ததுமான இனங்கள் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை-XII-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**ஏற்புரை**

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளுக்குப் போதிய இடவசதி அளித்து மனப்பூர்வமாக ஒத்துழைப்பு அளித்த பல்வேறு கல்வி நிறுவனங்களுக்கும் அதன் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தேர்வாணையம் நடத்திய பல்வேறு தேர்வுகளை திறம்பட நடத்தி முடிக்கத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்தின் அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

மாநில அரசின் கீழ் உள்ள பல்வேறு பதவிகளுக்கு நடத்தப்பட்ட தேர்வுப் பணிகளுக்கும் அலுவலர்களின் தெரிவுகளுக்கும் அழைத்தபோதெல்லாம் தேர்வாணையத்தின் அழைப்பினை உடனடியாக ஏற்று அவர்களுடைய சிரமங்களைப் பொருட்படுத்தாமல் தேர்வாணையத்திற்கு உதவி புரிந்த தேர்வாளர்களுக்கும், வல்லுநர்களுக்கும் இத்தேர்வாணையம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

பணிமாறுதல் மூலம் நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலமாக நியமனம் பெற உரிய பணியாளர்களை இறுதித் தெரிவு செய்து பரிந்துரை செய்ய அமைக்கப்பட்டுள்ள துறைத்தேர்வு குழுக்களின் பணி செவ்வனே நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பல்வேறு அரசுத் துறை செயலாளர்களுக்கும், துறைத் தலைவர்களுக்கும் தேர்வாணையம் தனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

இறுதியாக, தேர்வாணையத்தின் பணிகள் முறையாக நடைபெற ஆண்டு முழுவதும் உண்மையாகவும், திறமையாகவும் பணிபுரிந்த தேர்வாணையத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் தேர்வாணையம் தனது பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறது.

| | |
|---|---|
| முனைவர்.க.அருள்மொழி, இ.ஆ.ப., (ஓய்வு) | தலைவர் |
| முனைவர்.மூ.ராசாராம்., இ.ஆ.ப., (ஓய்வு) | உறுப்பினர் |
| முனைவர்.பெ.கிருஷ்ணகுமார். பி.இ., எம்.பி.ஏ., எம்.பில்., எம்சிஎஸ்டி (யுஎஸ்ஏ)., பிடிஎப்எல் (மலேசியா)., எம்ஐஇஇஇ., பி.எச்.டி. | உறுப்பினர் |
| திரு.அ.சுப்ரமணியன், பி.இ., எம்.ஐ.இ. | உறுப்பினர் |
| திரு.வெ.சுப்பையா, எம்.ஏ., பி.எல். | உறுப்பினர் |
| திரு.ஏ.வி.பாலுசாமி, பி.எஸ்.சி., பி.எல். | உறுப்பினர் |

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
சென்னை - 600 003.
நாள்: 18.09.2017

**மா. விஜயகுமார், இ.ஆ.ப**
செயலாளர்

## பிற்சேர்க்கை– I

### 31.03.2017 – அன்று உள்ளபடி தேர்வாணையத்தின் ஒப்பளிக்கப்பட்ட பணியாளர் பணியிடங்களின் எண்ணிக்கை

| வ.எண். | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | இணைச் செயலாளர் | 1 |
| 2. | துணைச் செயலாளர் | 3 |
| 3. | சார்புச் செயலாளர் | 20 |
| 4. | கணக்கு அலுவலர் | 1 |
| 5. | உதவி கணக்கு அலுவலர் | 1 |
| 6. | ஆராய்ச்சி அலுவலர் | 1 |
| 7. | நூலகர் | 1 |
| 8. | முதுநிலை ஆராய்ச்சி உதவியாளர் | 1 |
| 9. | பிரிவு அலுவலர் | 72 |
| 10. | தனிச் செயலாளர் | 1 |
| 11. | உதவிப் பிரிவு அலுவலர் | 168 |
| 12. | உதவிப் பிரிவு அலுவலருடன் கூடிய கணினி திட்டமிடுனர் | 26 |
| 13. | உள்ளீடு-வெளியீடு மேற்பார்வையாளர் (கணிப்பொறி) | 1 |
| 14. | உள்ளீடு-வெளியீடு இயக்குபவர் (கணிப்பொறி) | 1 |
| 15. | அடிப்படை விவரங்கள் பதிவு செய்பவர் (கணிப்பொறி) | 8 |
| 16. | நேர்முக உதவியாளர் | 7 |
| 17. | நேர்முக எழுத்தர் | 12 |
| 18. | உதவியாளர் | 99 |
| 19. | தட்டச்சர் | 39 |
| 20. | தொலைபேசி இயக்குபவர் | 2 |
| 21. | பதிவுரு எழுத்தர் மற்றும் பதிவுரு உதவியாளர் | 23 |
| 22. | மின் தூக்கி இயக்குபவர் | 1 |
| 23. | முதன்மை ஏவலர் | 1 |
| 24. | ஓட்டுநர் | 17 |
| 25. | அலுவலக உதவியாளர் | 92 |
| 26. | காவலர் | 6 |
| 27. | பெருக்குபவர் | 4 |
| 28. | துப்புரவுப் பணியாளர் | 3 |
| 29. | குடிநீர் வைப்பவர் | 1 |
| 30. | துப்புரவுப் பணியாளர் (கால முறை ஊதியம்) | 11 |
| | மொத்தம் | 624 |

# பிற்சேர்க்கை – II

## [பகுதி – (I) (III) (6)]

## 2016-2017 ஆம் ஆண்டிற்கான வருவாய் மற்றும் செலவின விவரங்கள்

| இனங்கள் | தொகை ஆயிரங்களில் (ரூபாய்) |
|---|---|
| வருவாய் | |
| தேர்வுக் கட்டணம் | 92,210 |
| விண்ணப்பக் கட்டணம் | 41,524 |
| பழைய பொருட்கள் விற்பனை | 29 |
| இதர வரவுகள் | 119 |
| சம்பளக் கணக்கு அலுவலகம் (தலைமைச் செயலகம்) | 31 |
| மொத்தம் | 1,33,913 |
| செலவு | |
| அடிப்படைச் சம்பளம் | 1,05,113 |
| மருத்துவப் படி, வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி | 15,162 |
| அகவிலைப்படி | 1,38,339 |
| மருத்துவப் படி | 450 |
| ஏனையப் படிகள் | 1,371 |
| விடுப்புப் பயணச் சலுகைகள் | 1,211 |
| அலுவலகப்பணி அஞ்சல் வில்லைகள் மற்றும் தபால் செலவுகள் | 400 |
| பயணப் படிகள் | 968 |
| தொலைபேசி கட்டணங்கள் | 1,359 |
| ஏனைய சில்லரைச் செலவுகள், நூலக புத்தகம் மற்றும் அறைகலன் | 2,252 |
| தொழில்முறை மற்றும் சிறப்புப் பணிகளுக்கான தொகை | 2,99,991 |
| பரிசுகள் மற்றும் வெகுமதிகள் | 4 |
| வாடகை, தண்ணீர் கட்டணம் மற்றும் வரிகள் | 2,083 |
| கால முறை பராமரிப்பு | 480 |
| விளம்பரச் செலவுகள் | 10,744 |
| இயந்திரம் மற்றும் உபகரணம் வாங்கியது | 300 |
| இயக்க ஊர்தி வாங்குதல், பராமரிப்பு, வாடகைக் கட்டணங்கள் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் | 10,825 |
| கூலி | 4,729 |
| மின் கட்டணம் | 4,239 |
| கனிணி மற்றும் துணைப்பாகங்கள் – வாங்குதல், பராமரித்தல் மற்றும் எழுதுபொருள்கள் | 1,179 |
| அச்சக மற்றும் விருந்தோம்பல் செலவினம் | 93 |
| சிறு பணிகள் | 0 |
| மொத்தம் | 6,01,292 |

# பிற்சேர்க்கை – III

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி II)

## ஆண்டு 2016-2017

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 1. | உதவி ஆசிரியர், தமிழ்நாடு அமைச்சுப் பணி (2006–2007) மற்றும் கூட்ட நேர் காண்பாளர், தமிழ்நாடு பொது சுகாதார சார்நிலைப் பணி (2009–2010) | 16.04.2011 | 30.03.2012 | - | - | - | - | - | - | 2 | 2 | 391 | 168 |
| 2. | ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தொகுதி-II 2010-2011 (நேர்காணல் அல்லாத பதவிகள்) | 02.05.2011 | 22.05.2015 | 2 | – | – | 1 | 2 | - | 3 | 8 | 61,108 | 30,164 |
| 3. | தொகுதி-IV பணிகள் 2013-2014 மற்றும் 2014-2015 | 14.10.2014 | 22.05.2015 | 794 | 161 | 67 | 1018 | 1329 | 204 | 1581 | 5154 | 12,72,862 | 10,60,401 |
| 4. | ஒருங்கிணைந்த பொறியியல் பணிகள் தேர்வு 2012–2014 | 24.03.2014 | 18.01.2016 | 14 | 1 | 3 | 20 | 27 | 4 | 31 | 100 | 54,690 | 31,653 |
| 5. | மகப்பேறு மற்றும் குழந்தை நல அலுவலர், தமிழ் நாடு பொது சுகாதாரப் பணி 2014–2015. | 31.07.2015 | 20.05.2016 | 13 | 3 | 1 | 16 | 21 | 3 | 25 | 82 | 12,192 | 12,149 |

# பிற்சேர்க்கை – III

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி II)

## ஆண்டு 2016-2017

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை | | | | | | | | தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| – | – | – | – | – | – | 6 | 6 | – | – | – | – | – | – | 2 | 2 | முதுகலைப் பட்டம் | – |
| – | – | – | – | – | – | – | – | 2 | – | – | 1 | 5 | - | - | 8 | பனி ரெண்டாம் வகுப்பு | – |
| – | – | – | – | – | – | – | – | 863 | 175 | 59 | 1461 | 2201 | 185 | 182 | 5126 | பத்தாம் வகுப்பு | 1 இ.உ. 16 தட்டச்சர் மற்றும் 42 சுருக்கெழுத்து தட்டச்சர் பணிகள் போதிய விண்ணப் பதாரர்கள் இன்மையால் அடுத்த தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது. |
| 31 | 4 | 10 | 60 | 96 | 13 | 7 | 221 | 13 | 2 | 4 | 28 | 45 | 4 | 3 | 99 | பொறியியல் பட்டம் | 1 பி.வ (காது கேளாதவர்) பணி போதிய விண்ணப் பதாரர்கள் இன்மையால் அடுத்த தேர்வுக்கு முன் கொண்டு செல்லப்பட்டது. |
| 29 | 9 | 3 | 47 | 73 | 9 | 1 | 171 | 16 | 3 | 1 | 21 | 38 | 3 | – | 82 | பட்டப்படிப்பு | - |

## பிற்சேர்க்கை – III

### நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி II)

### ஆண்டு 2016-2017

| வரிசை எண் | பதவி மற்றும் பணியின் பெயர் | அறிவிக்கை நாள் | இறுதி முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | | | | | | | | பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | முதன்மை தேர்வில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) | (12) | (13) | (14) |
| 6. | கிராம நிர்வாக அலுவலர் 2014-2015 | 12.11.2015 | 01.07.2016 | 120 | 17 | 6 | 161 | 215 | 27 | 256 | 813 | 10,43,931 | 10,27,692 |
| 7. | உதவிப் புள்ளியியல் ஆய்வாளர் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி | 07.05.2015 | 12.08.2016 | 41 | 8 | 3 | 55 | 72 | 9 | 82 | 270 | 36,700 | 34,953 |
| 8. | இயக்க ஊர்தி ஆய்வாளர் நிலை–II, தமிழ்நாடு போக்குவரத்து சார்நிலைப் பணி 2011–2012 | 25.06.2012 | 19.08.2016 | 3 | – | – | 4 | 4 | 1 | 5 | 17 | 2,537 | 2,443 |
| 9. | தொகுதி-I பணிகள் 2012-2014 | 29.12.2013 | 23.08.2016 | 11 | 3 | 2 | 16 | 23 | 1 | 23 | 79 | 4202 (முதன்மை) | 3407 (முதன்மை) |
| 10. | ஆராய்ச்சி உதவியாளர் தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி | 16.12.2015 | 06.10.2016 | 2 | 1 | – | 3 | 4 | – | 4 | 14 | 3,557 | 1,950 |

# பிற்சேர்க்கை – III

## நேரடித் தெரிவு இறுதி முடிவுகள் விவரம் (பகுதி II)

## ஆண்டு 2016-2017

| வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை | | | | | | | | தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை | | | | | | | | கல்வித் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | ப.வ | ப.வ (அ) | ப.கு | மி.பி.வ/சீ.ம | பி.வ | பி.வ (மு) | பொது | மொத்தம் | | |
| (15) | (16) | (17) | (18) | (19) | (20) | (21) | (22) | (23) | (24) | (25) | (26) | (27) | (28) | (29) | (30) | (31) | (32) |
| – | – | – | – | – | – | – | – | 83 | 11 | 2 | 249 | 302 | 15 | 4 | 666 | பத்தாம் வகுப்பு | 147 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. |
| – | – | – | – | – | – | – | 541 | 44 | 8 | 3 | 82 | 122 | 9 | 2 | 270 | பட்டப்படிப்பு | – |
| 79. | முனைவர்.கி.லெட்சுமணன், எம்.காம் ஏ.சி.எஸ்(இன்டர்)., எம்.பில்., பிஎச்.டி | 06.07.2007 | 05.07.2013 |
| 80. | திருமதி.மா.சோபினி, எம்.ஏ | 02.07.2007 | 01.07.2013 |
| 81. | திரு.பி.எஸ்.முகமது அலி ஜின்னா, பி.இ | 02.07.2007 | 16.05.2011 |
| 82. | முனைவர்.எஸ்.சேவியர் ஜேசு ராஜா, எம்.எஸ்.சி., எம்.பில்.,பிஎச்.டி | 02.07.2007 | 01.07.2013 |
| 83. | முனைவர்.கே.மு.இரவி, எம்.ஏ.,எம்.எல்., ஏ.சி.எஸ் (இறுதி), பிஎச்.டி (சட்டம்) | 29.03.2008 | 29.03.2013 |
| 84. | திரு.க.சண்முக முருகன், பி.எஸ்.சி., எம்.ஏ., பி.எல் | 02.07.2008 | 01.07.2014 |
| 85. | திரு.கே.கே.இராஜா, எம்ஏ., பிஎல் | 27.08.2008 | 14.06.2014 |
| 86. | டாக்டர்.சு.பன்னீர் செல்வம், எம்.பி.பி.எஸ்., டி.சி.எச் | 24.02.2011 | 23.02.2017 |
| 87. | திரு.வெ.இரத்தினசபாபதி, பி.எஸ்.சி., பி.எட்., எம்.பி.ஏ | 23.02.2011 | 02.08.2015 |
| 88. | முனைவர்.பெ.பெருமாள்சாமி, எம்.எஸ்.சி., எம்.எட்., பிஎச்.டி | 28.02.2011 | 12.11.2015 |

| வரிசை எண் | தேர்வாணைய உறுப்பினர்களின் பெயர் | பதவிக் காலம் | |
|---|---|---|---|
| | | முதல் | வரை |
| 89. | திரு.த.குப்புசாமி, பி.எஸ்.சி., பி.ஜி.எல் | 23.02.2011 | 22.02.2017 |
| 90. | திரு.க.செல்வமணி, பி.எஸ்.சி., பி.எல்.,டி.பி.பி.எ | 23.02.2011 | 19.06.2016 |
| 91. | திரு.ஐ.ராஜா, இ.கா.ப (ஓய்வு) எம்.ஏ (பொருளாதாரம்) எம்.பி.ஏ (ஆஸ்திரேலியா) | 10.05.2012 | 09.04.2014 |
| 92. | திரு.செ.பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.எல் | 06.08.2012 | 30.01.2016 |
| 93. | முனைவர். ரா. பிரதாப் குமார், எம்.ஏ., எம்.எல்., எம்.பி.ஏ., பி.எச்.டி | 02.02.2016 | சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க 22.12.2016 முதல் உறுப்பினர்களின் நியமனம் இரத்து செய்யப்பட்டது. |
| 94. | வெ.சுப்பையா, எம்.ஏ., பி.எல் | 02.02.2016 | |
| 95. | சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்., | 02.02.2016 | |
| 96. | திரு.மு.சேதுராமன், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.டபிள்யு., | 02.02.2016 | |
| 97. | திரு.ஏ.வி.பாலுசாமி, பி.எஸ்.சி., பி.எல்., | 02.02.2016 | |
| 98. | திரு.மு.மாடசாமி, பி.ஏ., பி.எல்., | 02.02.2016 | சென்னை உயர்நீதிமன்ற ஆணைக்கிணங்க 22.12.2016 முதல் உறுப்பினர்களின் நியமனம் இரத்து செய்யப்பட்டது. |
| 99. | திரு.வெ.இராமமூர்த்தி, பி.எஸ்.சி., பி.எல்., | 02.02.2016 | |
| 100. | முனைவர்.பெ.கிருஷ்ணகுமார், பி.இ., எம்.பி.ஏ., எம்.பில்., எம்.சிஸ்டி (யுஎஸ்ஏ)., பிடிஎப்எல் (மலேசியா), எம்ஐஇஇஇ., பி.எச்.டி., | 02.02.2016 | |
| 101. | திரு.அ.சுப்ரமணியன், பி.இ., எம்.ஐ.இ., | 02.02.2016 | |
| 102. | திரு.ந.பூ.புண்ணியமூர்த்தி, டி.சி.இ | 02.02.2016 | |
| 103. | முனைவர்.மூ.ராசாராம், இ.ஆ.ப (ஓய்வு) | 02.02.2016 | |

## பிற்சேர்க்கை-XII

### [பகுதி-VI(இ)]

### கடந்த ஐந்தாண்டுகளில் தேர்வாணையத்தின் கருத்துரையிலிருந்து மாறுபட்டு அரசு முடிவெடுத்தது மற்றும் தேர்வாணையத்தைக் கலந்தாலோசிக்காமல் முடிவெடுத்த நிகழ்வுகளின் எண்ணிக்கை

| வரிசை எண் | ஆண்டு | தேர்வாணையத்தின் கருத்தில் இருந்து அரசு மாறுபட்டு முடிவெடுத்த நேர்வுகளின் எண்ணிக்கை | தேர்வாணையத்தை அரசு கலந்தாலோசிக்கப்படாத நேர்வுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | 2012–2013 | 1 | 0 |
| 2. | 2013–2014 | 3 | 0 |
| 3. | 2014–2015 | 2 | 0 |
| 4. | 2015–2016 | 2 | 0 |
| 5. | 2016–2017 | 9 | 0 |

## பிற்சேர்க்கை–XIII

### கடந்த ஐந்து ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் மற்றும் காலியிடங்களின் விபரம்







கடந்த ஐந்து ஆண்டுகளில் தெரிவு பெற்று பணி நியமனத்திற்காக பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விபரம்




கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வுகளின் எண்ணிக்கை விபரம்




*(தொடர்ச்சி....)*

## பிற்சேர்க்கை–XIII (தொடர்ச்சி....)

**கடந்த ஐந்து ஆண்டுகளில் பதவி உயர்வு மற்றும் பணி மாற்றம் மூலம் பணி நியமனம் பெற பரிந்துரை செய்யப்பட்டோர் எண்ணிக்கை விபரம்**




**கடந்த ஐந்து ஆண்டுகளில் தீர்வு செய்யப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை வழக்குகள் எண்ணிக்கை விபரம்**




**கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வுகளின் எண்ணிக்கை விவரம்**




வரிசை 1 : காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை
வரிசை 2 : வாய்மொழித் தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் எண்ணிக்கை

சுருக்கம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – ஆண்டறிக்கை 2016 - 2017 – பதிவு செய்யப்பட்டது .

**பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எம்)த் துறை**

அரசாணை (நிலை) எண்.80

நாள் : 27.06.2018
விளம்பி வருடம், ஆனி 13,
திருவள்ளுவர் ஆண்டு 2049.

படிக்கப்பட்டது:

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
கடித எண். 585 / ஆர்&டி / 2017, நாள் 21.09.2017.

*****

**ஆணை :**

பதிவு செய்யப்பட்டது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கிரிஜா வைத்தியநாதன்**
**தலைமைச் செயலாளர்**

பெறுநர்

செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை - 600 003.
அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை - 600 009.
புள்ளியியல் மற்றும் பொருளாதார ஆணையர், சென்னை – 600 006.
நூலகர், நாடாளுமன்ற நூலகம், இந்திய அரசு, புதுதில்லி (2 படிகள்).
நூலகர், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-9 (3 படிகள்).
நூலகர், மைய அரசு தலைமைச் செயலக நூலகம், புதுதில்லி -110 001 (2 படிகள்).
இந்திய அரசு உள் விவகாரங்கள் அமைச்சகம், புதுதில்லி - 110 001.
(மேல் கடிதத்துடன்).
இந்திய அரசு துணைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச்
சீர்திருத்தத் துறை, அமைச்சரவைச் செயலகம், புதுதில்லி - 110 001.

(த.பி.பா)

-2-

இந்திய அரசு துணைச் செயலாளர், நிதி ஆயோக், புதுதில்லி - 110 001.
பொறுப்பிலுள்ள அலுவலர், தகவல் மையம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை-600 002.
இந்திய ஆட்சிப் பணி அலுவலர் கல்லூரி, பெல்லாவிஸ்டா, ராஜ்பவன் சாலை, ஐதராபாத் - 500 082.
தேசிய நூலகம், 5, எஸ்பலனேட் ஈஸ்ட், எஸ்பலனேட், கொல்கத்தா - 700 069. மேற்கு வங்காளம்.
கன்னிமாரா பொது நூலகம், சென்னை- 600 008.
மத்திய நூலகம், ஷாகித் பகத்சிங் ரோடு, கோட்டை, மும்பை, மகாராஷ்டிரா.
பிற்படுத்தப்பட்டோர் நல மண்டல இயக்குநர், தென்மண்டலம், சாஸ்திரிபவன், சென்னை- 600 006 (3 படிகள்).
இயக்குநர், இந்திய ஆவணக் காப்பகம், ஜன்பத், புதுதில்லி ( 3 படிகள்).
மத்திய அரசு உள்துறை விவகாரங்களின் அமைச்சகம், மனித சக்தி இயக்ககம், புதுதில்லி (2 படிகள்)
நூலக மற்றும் மேற்கோள் அலுவலர், இந்திய பொது நிருவாகக் கழகம், இந்திர பிரஸ்தா தோட்டம், ரிங் சாலை, புதுதில்லி.
இயக்குநர், தேசிய நிருவாகக் குழு, சார்லிவில்லி, முசௌரி, டேராடுன், உத்தரகாண்ட்.
உள்துறை விவகாரங்களின் அமைச்சகத்தின் நூலகம், தெற்கு கட்டடத் தொகுதி, புதுதில்லி (2 படிகள்).
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை- 600 018.
பொறுப்பிலுள்ள அலுவலர், தகவல் மையம், மதுரை.
இயக்குநர், ஐக்கிய நாடுகளின் நூலகத்தின் கூட்டமைப்பு அலுவலகம், எண்.11, புதுதில்லி தெற்கு விரிவாக்கம், தொகுதி 1, புதுதில்லி – 110 049. (2 படிகள்)
நூலகர், தலைமைச் செயலக நூலகம், சென்னை- 600 009.
ஆணையர், ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி துறை, எழும்பூர், சென்னை- 600 008.
மாண்புமிகு ஆளுநரின் கூடுதல் தலைமைச் செயலாளர், ராஜ்பவன், சென்னை - 600 022.
மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மைச் செயலாளர்-III, தலைமைச் செயலகம், சென்னை- 600 009.
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த) அவர்களின் சிறப்புநிலை நேர்முக உதவியாளர், சென்னை- 600 009.
செயலாளர், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம், புதுதில்லி - 110 069.
செயலாளர், பிற மாநிலங்களின் அரசுப் பணியாளர் தேர்வாணையங்கள்.
தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை- 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலாளர், சென்னை- 600 009.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நி.சீ. II ) துறை, சென்னை- 600 009. (3 படிகள்)
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

அ.மோ.அப்ரூஸா 27/06/18

**பிரிவு அலுவலர்**

27/06/18

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் VI-ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்பது வழக்குகளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திற்கு மாறாக முடிவெடுத்ததற்கான விளக்கக் குறிப்பு**

**வழக்கு- I**

தடய அறிவியல் துறை இயக்குநர் (பொறுப்பு) அவர்களின் செயல்முறை ஆணை எண்.அ1/30697/2014, நாள் 13.02.2014–ன்படி சென்னையிலுள்ள முதன்மை தடய அறிவியல் ஆய்வகத்திலுள்ள உதவி இயக்குநர்கள் 15 நாட்கள் சுழற்சி முறையில் சென்னை மாநகரில் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்களின் எல்லைக்குட்பட்ட காவல் நிலைய வரம்பிற்குள் நடக்கும் குற்ற நிகழ்விடங்களுக்கு செல்லவும், குற்றவாளிகளை கண்டறிய உதவும் தடயங்களை சேகரிக்கவும் ஆணையிடப்பட்டது. மேற்கூறிய செயல் முறை ஆணையின்படி திருமதி S. கலா, உதவி இயக்குநர், 01.04.2014 முதல் 15.04.2014 வரை மேற்கூறிய சுழற்சி முறை ஆணைப்படி பணிபுரிய வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்தில் திருமதி S. கலா, உதவி இயக்குநர் கீழ்காணும் இரண்டு குற்ற நிகழ்விடங்களுக்கு சென்றிருக்க வேண்டும்:-

(i.) 08.04.2014 அன்று நடந்த ஆவடி காவல் நிலையத்தில் பிரிவு 302 இ.த.ச-ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்.341/2014-ல் முத்தூட் பைனான்ஸ் காவலாளி கொலை செய்யப்பட்ட வழக்கு.

(ii.) 15.04.2014 அன்று நடந்த ஆதம்பாக்கம் காவல் நிலையத்தில் குற்ற எண்.290/ 2014-ல் பதிவு செய்யப்பட்ட தீ விபத்து வழக்கு.

2. திருமதி S. கலா, உதவி இயக்குநர், 08.04.2014 மற்றும் 15.04.2014 ஆகிய இரண்டு நாட்களில் சுழற்சிமுறை ஆணைப்படி மேற்கூறிய குற்ற நிகழ்விடங்களுக்கு செல்லவில்லை. தனியர் 08.04.2014 அன்று அலுவலத்திற்கு வந்து வருகைப்பதிவேட்டில் கையெழுத்திட்டுள்ளார். இது தொடர்பாக தனியருக்கு காரணம் கேட்கும் குறிப்பாணை அளிக்கப்பட்ட நிலையில் தனியர் 10.05.2014 அன்று அளித்துள்ள தன்னிலை விளக்கத்தில் 08.04.2014 அன்று குறிப்பிட்ட குற்ற நிகழ்விடத்திற்கு செல்லாமைக்கு பின்வரும் காரணங்களை தெரிவித்துள்ளார்:-

(i.) திருவண்ணாமலை அமர்வு நீதிமன்றத்தில் 15.04.2014 அன்று ஆஜராக வேண்டி அனுப்பப்பட்ட அழைப்பாணையினை 08.04.2014 அன்று வாங்கிக்கொண்டது;

(ii.) 08.04.2014 அன்று அலுவலகத்தில் காவல் ஆய்வாளர், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இராமநாதபுரம் அவர்களுக்கு இ.த.ச.பிரிவு 161-ன்கீழ் அறிக்கை அளித்தது;

(iii.) ஆவடி காவல்நிலைய குற்ற எண்.341/2014 தொடர்பான குற்ற நிகழ்விடத்திற்கு செல்ல, இயங்கும் தடய அறிவியல் பணியை மேற்பார்வையிடும் துணை இயக்குநர் 08.04.2014 அன்று பணித்தபொழுது, தன்னுடைய உயர் அலுவலரான திருமதி P. கலாராணி, துணை இயக்குநர் அவர்கள் அலுவலகத்திற்கு வருகைபுரியாத காரணத்தினால் தான் செல்ல இயலவில்லை;

(iv.) இயங்கும் தடய அறிவியல் பணியை மேற்பார்வையிடும் துணை இயக்குநர் (பொறுப்பு), தடய அறிவியல் துறை அவர்கள் தனக்கு பதிலாக அவரே மேற்கூறிய குற்ற நிகழ்விடத்திற்கு செல்வதாக தெரிவித்தது;

இது தொடர்பாக இயக்குநர் (பொறுப்பு), தடய அறிவியல் துறை அவர்களின் 09.10.2014 நாளிட்ட செயல்முறை ஆணையில் பின்வருமாறு ஆணையிடப்பட்டது:-

“தனியர் 08.04.2015 அன்று மேற்குறிப்பிட்ட குற்ற நிகழ்விடத்திற்கு செல்லவில்லை என்பது குற்றச்சாட்டுகள் மூலம் நிருபணமாகிறது. தனியரின் தன்னிலை விளக்கத்தில் கூறும் தொடர்பற்ற, முரண்பாடுடைய தவிர்க்க முடியாத சூழ்நிலை குறித்த காரணங்கள் ஏற்றுக் கொள்ளும்படியாக இல்லை. அறிவியல் அலுவலர் (தற்போது உதவி இயக்குநராக தரம் உயர்த்தப்பட்டுள்ளது) இயக்குநர் (பொறுப்பு), தடய அறிவியல் துறை அவர்கள் 13.02.2014 நாளிட்ட சுழற்சிமுறை ஆணையில் குறிப்பிட்டவாறு குற்ற நிகழ்விடங்களுக்கு செல்ல வேண்டும். இதன் அடிப்படையில் தனியர் தன் கடமையைச் செய்யத் தவறியதால் 1973-ஆம் ஆண்டைய தமிழ்நாடு அரசு பணியாளர் நன்னடத்தை விதி 20-ன்படி தனியரின் தன்னிலை விளக்கம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை என்பதால், தனியருக்கு திரண்ட பயனின்றி மூன்று வருடத்திற்கு ஊதிய உயர்வினை நிறுத்தம் செய்யவும், இந்த ஊதிய உயர்வு நிறுத்தப்படுவது ஓய்வூதியத்தை பாதிக்காது எனவும் உத்தரவிடப்படுகிறது”.

3. மேற்கண்ட தண்டனையை எதிர்த்து திருமதி S. கலா, பின்வரும் காரணங்களின் அடிப்படையில் அரசிடம் மேல்முறையீடு செய்தார்:-

(i.) இயக்குநர் (பொறுப்பு), அவர்களால் தனக்கு அளிக்கப்பபட்ட காரணம் கேட்கும் குறிப்பாணை முரண்பட்டதாகவும், குழப்பமானதாவும் உள்ளது.

(ii.) தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றசாட்டுகளுக்கு அளிக்கப்பட்ட ஆவணங்கள் தனியருக்கு வழங்கவில்லை எனவும், தனியர் குற்றச்சாட்டுகளை மறுப்புதற்கு உரிய வாய்ப்பு வழங்கவில்லை.

(iii.) இயங்கும் தடய அறிவியல் ஆய்வக பணியை மேற்பார்வையிடும் துணை இயக்குநர் திரு. இளங்கோவன் அவர்களிடமிருந்து ஒரு மாதம் கழித்து தான் குற்ற நிகழ்வுக்கு செல்லாதது குறித்து அறிக்கை பெறப்பட்டு, அவ்வறிக்கையினை தன் கோரிக்கையின் பேரில் வழங்காதது.

(iv.) சுட்டிக்காட்டப்பட்ட இரண்டாவது குறைபாடு குறித்து தான் அளித்த விளக்கத்தை ஒழுங்குமுறை அலுவலர் பதிவு செய்து, அதை மறுப்பதற்கு தகுந்த காரணங்கள் தெரிவிக்காததால் இரண்டாவது குறைபாடு நிருபிக்கப்படவில்லை.

4. இத்தண்டனையை எதிர்த்து மேல்முறையீட்டாளர் அரசுக்கு மேல்முறையீடு சமர்ப்பித்ததை தொடர்ந்து, அரசு அம்மேல்முறையீடு தொடர்பான ஆவணங்களை தேர்வாணையத்திற்கு அனுப்பி வைத்து அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினைக் கோரியது. தேர்வாணையம் அன்னாருக்கு தண்டனையாக ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி ஓராண்டுக்கு நிறுத்தம் செய்யலாம் என்பதே சரியானதும் மற்றும் முறையானதுமாகும் என்ற கருத்தினையே தனது ஆலோசனையாக அரசுக்கு வழங்கியது.

5. 09.10.2014-ஆம் தேதியிட்ட செயல்முறை ஆணை எண்.A3/34112/2014-ல் தடய அறிவியல் இயக்குநர் அவர்கள் தனியருக்கு அளித்த திரண்ட பயனின்றி மூன்று வருடத்திற்கு ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனையை குறைத்து, அரசு, அரசாணை (3டி) எண்.14, உள் (காவல்.18) துறை, நாள் 24.02.2016-ல், ‘கண்டனம்’ என்னும் தண்டனையை வழங்கியது.

6. இது குறித்து தெரிவிப்பது என்னவெனில், திரண்ட பயனின்றி மூன்று ஆண்டுகளுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனையை மிகையாக கருதி, அதை திரண்ட பயனின்றி ஓராண்டுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் என்று குறைத்து வழங்குமாறு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் வழங்கிய கருத்துக்கு மாறுபட்டு அரசு தனியருக்கு 'கண்டனம்' என்றும் தண்டனையை கீழ்க்கண்ட காரணங்களால் வழங்கியது:-

சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளின்மீது வழங்கப்பட்ட தண்டனை குற்ற நிகழ்விடத்திற்கு மேல்முறையீட்டாளர் செல்லவில்லை என்பது குறித்ததாகும். அக்குறைபாடுகளை மேல்முறையீட்டாளர் பல்வேறு காரணங்களை கூறி ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் 08.04.2014 அன்று குற்ற நிகழ்விடத்திற்கு செல்லாமல் அலுவலகத்திற்கு வருகைபுரிந்த செயலால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் நிரூபணம் ஆனது. அதன்பேரில் அவருக்கு தண்டனை உரிய அலுவலரால் அளிக்கப்பட்டது. இது குறித்து கருத்து தெரிவிக்கையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வழங்கப்பட்ட தண்டனையை ஓராண்டிற்கு ஊதிய உயர்வு நிறுத்தம் என்பதாக குறைக்கலாம் என்று கூறியதன்பேரில், அரசு, தண்டனையை குறைத்து 'கண்டனம்' ஆக அளிக்கப்பட்டால் உரிய நீதி தனியருக்கு வழங்கப்பட்டதாக அமையும் என்பதை கருத்திற்கொண்டு தடய அறிவியல் துறை இயக்குநர் அளித்த திரண்ட பயனின்றி மூன்றாண்டுகளுக்கு ஊதிய உயர்வு நிறுத்தம் என்ற தண்டனை 'கண்டனம்' என்னும் தண்டனையாக குறைத்து அரசு வழங்கியது.

X X X X X

<u>வழக்கு-II</u>

சேலம் பெண்கள் தனிக்கிளைச் சிறையில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணிபுரிந்த திருமதி.வி.ஜெயமணி என்பவர் மீது தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி எண்.17 (அ)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சேலம் மத்திய சிறை கண்காணிப்பாளரின் செயல்முறை ஆணை எண்.646/தகிசி/2009–4, நாள் 27.11.2009–ன்படி இவருக்கு "அடுத்த ஊதிய உயர்வு 3 ஆண்டுகள் திரண்ட பயனின்றி தள்ளி வைத்தல்" எனும் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

2. தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சிறைத்துறை துணைத்தலைவர் (பெண் தனிக்கிளைச் சிறைவாசிகள்), சென்னை–8 அவர்களுக்கு மேல்முறையீடு செய்ததில் மேற்படி தண்டனை சிறைத்துறைத் துணைத்தலைவர் செயல்முறை எண்.92/சிதுதுத/(பெசி)/2010, நாள் 06.07.2010–ன்படி "இவருடைய அடுத்த ஊதிய உயர்வு ஒரு வருட காலம் திரண்ட பயனின்றி தள்ளி வைக்கப்படுகிறது" என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மாற்றி அமைக்கப்பட்ட தண்டனையை ரத்து செய்யக் கோரி 14.10.2010–ல் கூடுதல் காவல்துறை இயக்குநர் மற்றும் சிறைத்துறைத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட இவரது மனு பரிசீலனை செய்யப்பட்டு சிறைத்துறைத் தலைவரின் செயல்முறை ஆணை எண்.43447/இடபிள்யூ.1/2010, நாள் 19.11.2010–ன் படி கூடுதல் காவல்துறை இயக்குநர்/சிறைத்துறைத் தலைவரால் நிராகரிக்கப்பட்டது.

3. மேற்படி மாற்றியமைக்கப்பட்ட தண்டணையை ரத்து செய்யக் கோரி திருமதி.வி.ஜெயமணி அரசுக்கு சமர்ப்பித்த மனுவின் மீது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தினை அரசு கோரியது. தேர்வாணையம் இவ்வழக்கினை ஆய்வு செய்து அன்னாருக்கு வழங்கப்பட்ட தண்டனையான "இவருடைய அடுத்த ஊதிய உயர்வு ஒரு வருட காலம் திரண்ட பயனின்றி தள்ளி வைக்கப்படுகிறது" முழுவதுமாக ரத்து செய்யக் கோரும் மனுவினை ஏற்கலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

4. இந்நிலையில், அன்றைய தினம் சம்பவம் நடைபெற்ற சமயத்தில் பணிபுரிந்த செல்வி.மு.ஜெயந்தி, இரண்டாம் நிலைக் காவலருக்கும் இதே தண்டனை வழங்கப்பட்டு, மனுதாரர் அரசுக்கு மனு சமர்ப்பித்ததைத் தொடர்ந்து, அந்நேர்வில், தமிழ்நாடு அரசுப்

பணியாளர் தேர்வாணையம் அத்தண்டனையை "கண்டனம்" என மாற்றி வழங்க ஆலோசனை கூறியது. இந்நேர்வில், மனுதாரர் திருமதி.வி.ஜெயமணி, இரண்டாம் நிலைக் காவலர் என்பவர் அளித்த மனுவினை ஏற்கலாம் என தேர்வாணையம் வழங்கிய கருத்திலிருந்து மாறுபட்டு, சிறைத்துறை துணைத்தலைவர் (பெண் சிறைவாசிகள்) வழங்கிய தண்டனையை குறைத்து "கண்டனம்" எனும் தண்டனை வழங்க அரசு முடிவுசெய்து அவ்வாறே அரசாணை (நிலை) எண்.225, உள் (சிறை.2) துறை, நாள் 01.03.2016–ல் ஆணை வெளியிடப்பட்டது.

XXXXX

வழக்கு-III

திரு மு. சேகரன், உதவி இயக்குநர், கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் (பொ)–ஆகப் பணியாற்றிய போது மனைப்பிரிவு ஒப்புதல் குறித்த கோப்பு எண்.2702/2009–ஐ மனுதாரரிடமிருந்து கோரப்பட்ட விவரங்கள் பெறப்படுவதை எதிர்நோக்காமல் முதிராநிலையில் கோப்பினை முற்றாக்கியது சம்மந்தமாக தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகளில் விதி எண்.17(அ)–ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.22254/2010/கே1 (3), நாள் 13.12.2010-ன்படி கண்டனம் எனும் தண்டனை வழங்கப்பட்டது.

தனியர் தனக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையை எதிர்த்து அரசுக்கு 27.01.2011 அன்று மேல்முறையீடு செய்தார். திரு மு.சேகரன், உதவி இயக்குநர் அவர்களின் மேல்முறையீட்டு மனு ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து கோரப்பட்டது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் திரு மு. சேகரன், உதவி இயக்குநர் அவர்களால் 27.01.2011 அன்று அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்ட கருத்துக்கள் ஏதும் பரிசீலனைக்குரியதாக இல்லை. எனவே, அன்னாரது மேல்முறையீட்டு மனுவினைத் தள்ளுபடி செய்து, அன்னாருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையினை உறுதி செய்யலாம் என அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

ஆனால் அரசு, அரசாணை (டி) எண். 73, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 07.04.2016–ல் கோப்பினை முன்கூட்டியே முடிப்பதற்கு உயர் அதிகாரியின் அறிவுறுத்தலைப் பின்பற்றியது தவிர வேறு எந்த உள்நோக்கமும் இல்லாத காரணத்தினாலும், மேலும் மனுதாரர் முழு விவரங்கள் அடங்கிய அன்னாரது விண்ணப்பத்தினை மீள சமர்ப்பிக்க இயலும் என்பதனாலும் திரு மு.சேகரன், உதவி இயக்குநர், நகர் ஊரமைப்புத் துறை அவர்களால் 27.01.2011 அன்று அளிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை ஏற்க முடிவு செய்து அன்னாருக்கு வழங்கப்பட்ட 'கண்டனம்' எனும் தண்டனையினை இரத்து செய்து ஆணை பிறப்பித்துள்ளது.

XXXXX

வழக்கு-IV

சென்னை சட்டக்கல்லூரி வன்முறையைத் தடுப்பதற்கு தவறியதற்காக தமிழ்நாடு காவல் சார்நிலைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், விதி 3 (ஆ)–ன் கீழ் திரு.E.பெருமாள், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு), B–2, எஸ்பிளேனேடு காவல் நிலையம், சென்னை என்பவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் (4 குற்றச்சாட்டுக்கள்) தொடுக்கப்பட்டன.

2. திரு.E.பெருமாள், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு), B–2, எஸ்பிளேனேடு காவல் நிலையம் மற்றும் சென்னை என்பவருக்கு எதிராக த.ப.எண். 8/2011–ல் தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு 1,3 மற்றும் 4 ஆகியவற்றை ''நிரூபணமாகவில்லை'' என்றும் குற்றச்சாட்டு 2 ''நிரூபணமாகிறது'' என்றும் விசாரணை அலுவலரால் அறிக்கை அளிக்கப்பட்டது.

3. மேற்கண்ட குற்றச்சாட்டுகள், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தற்காப்பு விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம் ஆகியவற்றை தொடர்புடைய ஆவணங்களுடன் தீவிர பரிசீலனை செய்து, குற்றச்சாட்டுக்கள் 2, 3 மற்றும் 4 ஆகியவற்றை ''நிரூபணமாகிறது'' என முடிவு செய்து அன்னாருக்கு பிரதி மாதம் ரூ.200/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ஓய்வு ஊதியத்தில் பிடித்தம்' எனும் தண்டனையை வழங்க அரசால் உத்தேச முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், விதி 9–ன் கீழ் மேற்கண்ட தண்டனையை குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் ஏற்றுக் கொள்கிறாரா என அவரிடம் கோரப்பட்டது. ஆனால் மேற்கண்ட அலுவலர் இத்தண்டனையை ஏற்றுக்கொள்ளாததுடன் த.ப.எண். 8/2011–ல் மேற்கொள்ள உள்ள மேல்நடவடிக்கையை கைவிடுமாறும் கேட்டுக்கொண்டார். எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள், 1954, விதி 18 (1) (c) –ன் கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரை வேண்டப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்கிய குறிப்புரையில் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலருடன் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் நிலையிலுள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு ''கண்டனம்'' எனும் தண்டனை வழங்கப்பட்டுள்ளதால், இவர் மீதான தண்டனை ஏதும் வழங்க தேவையில்லை என தெரிவித்தது. தலைமைச் செயலக அறிவுறுத்தங்கள் விதி 95 (a) இன்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் இது குறித்து திருத்தப்பட்ட குறிப்புரை வழங்குமாறு கோரப்பட்டது, அதில் தேர்வாணையம் தனது முந்தைய குறிப்புரையினையே வலியுறுத்தியது.

5. அரசு இந்நேர்வில் தொடர்புடைய ஆவணங்களையும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையினையும் நன்கு பரிசீலனை செய்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையிலிருந்து மாறுபட்டு, ஏற்கனவே எடுக்கப்பட்ட உத்தேச முடிவினை உறுதிபடுத்த அரசு முடிவெடுத்தது. அதன்படி, திரு.E.பெருமாள், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு), B–2, எஸ்பிளேனேடு காவல் நிலையம், சென்னை என்பவருக்கு எதிராக த.ப.எண் 8/2011–ல் ''மாதம் ரூ.200/– வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு ஓய்வு ஊதியத்தில் பிடித்தம்'' எனும் தண்டனை வழங்கி அரசாணை (2டி) எண்.206, உள் (காவல்.2) துறை, நாள். 1.4.2016–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

XXXXX

வழக்கு- V

திரு C. இராஜாமணி, முன்னாள் மாவட்ட வருவாய் அலுவலர், காஞ்சிபுரம் அவர்களின் மீது வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்த குற்றச்சாட்டின் பேரில் முறைப்படியான வழக்கு தொடர ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு அரசு கடிதம் எண் 7035/97–14, பொது(சிறப்பு.அ)த் துறை, நாள் 05.11..2002ல் அனுமதி வழங்கப்பட்டது. அத்துறை தனது இறுதி விசாரணை அறிக்கை எண் RC278/2002/REV/C-III நாள் 30.03.2006ல் திரு C. இராஜாமணி மீது குற்றவியல் வழக்கு தொடர அனுமதியும், மேலும், தனியர்மீது துறைசார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருந்தது.

2. அதன்படி, அரசாணை (நிலை) எண்.868, பொது(சிறப்பு.அ)த்துறை, நாள் 29.08.2006ல் ஊழல் தடுப்பு சட்டம், 1988ன் கீழ் குற்றவியல் வழக்கு தொடர அனுமதி வழங்கப்பட்டது. மேலும், திரு C.இராஜாமணி அரசுக்கு தெரிவிக்காமல் தனது குடும்ப உறுப்பினர்கள் பெயரில் அசையாச்

சொத்துகளை சேர்த்ததற்காக அரசுப் பணியாளர் நன்னடத்தை விதிகள், 1973, விதி 7(1) (a)வை மீறியதற்காக தமிழ்நாடு குடிமைப் பணி விதிகள், விதி 17(b)ன் கீழ் அரசுக் கடித எண்7035/ 97–40, பொது(சிறப்பு.அ)த் துறை, நாள் 04.09.2006ன் கீழ் துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

3. முறையாக நடத்தப்பட்ட விசாரணையில், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் திரு. C. இராஜாமணி மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால், தனியருக்கு கட்டாய ஓய்வு எனும் தண்டனையுடன் 2/3 பங்கு ஓய்வூதியம் வழங்கலாம் பணிக் கொடை முழுவதையும் நிறுத்தம் செய்யலாம் என அரசால் உத்தேசமாக முடிவு செய்து நேர்முக கடிதம் எண் 7035/ 97–56, பொது(சிறப்பு.அ)த் துறை, நாள் 12.06.2009–ல் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் ஆலோசணை வேண்டப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அன்னாருக்கு கட்டாய ஓய்வு எனும் தண்டனை வழுங்கி, அவரது பணிக்கொடை பிடித்தம் ஏதும் செய்யாமல், அன்னாரது அனுமதிக்கப்பட்ட ஓய்வூதியத்தில் 2/3 பங்கு ஓய்வூதியம் வழங்கலாம் என்று, தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது.

5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்து அரசால் பரிசீலிக்கப்பட்டது. தமிழ் நாடு ஓய்வூதிய விதிகள், 1978, விதி 39–ல் கட்டாய ஓய்வு வழங்க அதிகாரம்படைத்த அதிகாரி ஓய்வூதியம் அல்லது பணிக் கொடை அல்லது இரண்டையும், குறிப்பிட்ட விகிதங்களில் வழங்கலாம் என உள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட தகுதியினால், அரசு விரும்பினால், பணிக்கொடை முழுவதையும் நிறுத்தவும் அரசுக்கு அதிகாரமுள்ளது. அதனால் பணிக்கொடைக் குறித்தான தேர்வாணையத்தின் கருத்தோடு அரசு உடன்படவில்லை. எனவே அரசு தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு அன்னாருக்கு கட்டாய ஓய்வு எனும் தண்டனை மற்றும் 2/3 பங்கு ஓய்வூதியம் வழங்கலாம் என்றும், அவரது பணிக்கொடை முழுவதும் பிடித்தம் செய்யலாம் என்றும், அரசாணை (2ப) எண்.58, பொது(சிறப்பு.அ)த் துறை, நாள் 26.06.2009–ல் ஆணை பிறப்பித்துள்ளது.

X X X X X

<u>வழக்கு- VI</u>

மரு.கே.ராஜேந்திரன், முன்னாள் மருத்துவ அலுவலர், திருச்சி மாவட்டம், பிரகாம்பி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணியாற்றியபோது 10 ஆண்டுகள் (01.02.2002 முதல் 02.02.2012 வரை) தன்னிச்சையாக பணிக்கு வராத காரணத்தால், அன்னார் மீது பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்களால் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 17 (ஆ)–ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு இரண்டு குற்றச்சாட்டுகள் தனியர் மீது சுமத்தப்பபட்டது. பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், விசாரணை அலுவலர், தனியர் மீதான குற்றச்சாட்டு கள் நிரூபணமாவதாக தெரிவித்த விசாரணை அறிக்கையை சமர்ப்பித்தார்.

2. அரசு தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் ஆராய்ந்து பார்த்ததில், தனியர் பிரகாம்பி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து பெரம்பலூர் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு மாறுதல் செய்யப்பட்டு அவரது பழைய பணி இடத்திலிருந்து 31.01.2002 அன்று விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் பணி மாறுதல் அடைந்த புதிய இடத்தில் பணியில் சேராமல் தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயத்தில் வழக்கு (O.A.No.697/2002) தொடர்ந்து பணி மாறுதல் ஆணைக்கு 14.02.2002 அன்று இடைகால தடை பெற்றார். தடையாணை பெற்ற பின்பும் கூட ஆரம்ப சுகாதார நிலையம், பிரகாம்பியில் பணியில் இணையவில்லை. பிரகாம்பியில் பணியில் இணைவதற்கு பதிலாக 27.02.2002 அன்று தனது விண்ணப்பத்தில் அவ்விடத்தில் வேறு ஒருவர்

பணியமர்த்தப்பட்டதால் பிரகாம்பி ஆரம்ப சுகாதார நிலையத்தில் அல்லது இருங்களூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தன்னை பணி மாறுதல் செய்யுமாறும் கோரினார். பின்பு 21.01.2003 அன்று தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயம், தனியரால் தொடரப்பட்ட வழக்கை (O.A.No.697/2002) தள்ளுபடி செய்தது. அதனை தொடர்ந்து தனியருக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களால், 05.05.2003 அன்று பெரம்பலூர் மாவட்டத்தில், அரியலூர் அரசு மருத்துவமனைக்கு பணி வழங்கப்பட்டது. தனியர் அங்கு பணியில் இணையவில்லை. மேலும், தனியர் அளித்த 11.10.2011 நாளிட்ட விண்ணப்பத்தின் பேரில் தனியருக்கு நாகப்பட்டினம் மாவட்டம், கோனேரிராஜபுரம், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 23.11.2011 அன்று பணி வழங்கப்பட்டது. இங்கும் பணியில் இணையாமல் 18.01.2012 நாளிட்ட விண்ணபத்தில் திருச்சி மாவட்டத்திற்கு பணியிடம் வழங்க கோரினார். பின்பு, பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரால் 21.01.2012 அன்று திருச்சி மாவட்ட இருங்களூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பணி வழங்கப்பட்டு தனியர் 03.02.2012 அன்று பணியில் இணைந்தார். தனியர் உயர் அலுவலர்களின் ஆணைகளை புறக்கணித்துவிட்டு தான் விரும்பும் இடத்தில் பணியில் இணைவதிலேயே பிடிவாதமாக இருந்தார்.

3. அனைத்து நடைமுறைகளையும் பின்பற்றிய பிறகு, நிரூபணமான குற்றச்சாட்டுகளுக்குத் தண்டனையாக அன்னாருக்கு “கட்டாய ஒய்வு” என்ற தண்டனை வழங்கலாம் என்று அரசு உத்தேச முடிவு எடுத்து, அதன் மீது தேர்வாணையத்தின் கருத்தினை, 1954–ம் ஆண்டைய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்கு முறை 18(1)(b)(iii)–ன் கீழ் அரசு கோரியது.

4. தேர்வாணையம் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் அளித்த கூடுதல் விளக்கத்தினை அனுமதிக்கலாம் என்றும், அரசு உத்தேசித்துள்ள “கட்டாய ஓய்வு” எனும் தண்டனையைக் கைவிடலாம் என்றும் அன்னாரது விடுப்பு காலத்தை பணிக்காலமாக கருதலாம் என்றும் தனது கருத்தினை அரசுக்கு வழங்கியது.

5. தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயம் ஏற்கனவே தனியரால் தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்தது. தனியர் சுமார் பத்து வருடங்கள் தன்னிச்சையாக பணிக்கு வரவில்லை. தனியர் தனது தன்னிலை மற்றும் மேல் விளக்கங்களில் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதை காரணம் காட்டி குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் மீதான அரசின் உத்தேச முடிவின் மீது அரசு மீண்டும் தேர்வாணையத்தின் கருத்தினை கோரியது.

6. தேர்வாணையம், ‘கட்டாய ஓய்வு’ எனும் தண்டனையைக் கைவிடலாம் என்றும், அன்னாரது விடுப்புக் காலத்தை பணிக்காலமாக கருதலாம் என்றும் முன்பு அளித்த கருத்தினையே மீண்டும் அரசுக்கு வழங்கியது.

7. மரு.கே.ராஜேந்திரனுக்கு மருத்துவம் மற்றும் ஊர நலப்பணிகள் இயக்குநர் அவர்களால் தலைமை மருத்துவமனை, பெரம்பலூருக்கு வழங்கப்பட்ட பணிமாறுதல் ஆணையின் மீது தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயம் (O.A.No.697 / 2002) 14.02.2002 அன்று இடைக்கால தடை விதித்தபோதிலும், நிருவாகக் காரணமாக வழங்கப்பட்ட பணி மாறுதல்கள் மீது தீர்ப்பாயம் தலையிட மறுத்து மேற்கூறப்பட்ட வழக்கினை 21.01.2003 அன்று தள்ளுபடி செய்தது. அதன் பிறகு, மருத்துவம் மற்றும் ஊர நலப்பணிகள், இயக்குநர் 05.05.2003 அன்று தனியருக்கு பணி மாறுதல் வழங்கியிருக்கிறார். இந்நிலையில் கூட, தனியர் பணியில் இணையவில்லை. மேலும், தன்னிலை விளக்கம் மற்றும் மேல் விளக்கத்தில் தனியர் தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டுள்ளார். மேற்கூறப்பட்ட விளக்கங்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும், அரசு பணியாளர் தேர்வாணையம் 21.05.2015 நாளிட்ட கடிதத்தில் போதிய காரணங்கள் இல்லை என தெரிவித்து தனியரின் விடுப்பை பணிக்காலமாக கருதுமாறு ஏற்கனவே கூறிய கருத்தையே மீண்டும் வலியுறுத்தியது. 21.01.2003 நாளிட்ட தமிழ்நாடு நிருவாக தீர்ப்பாயத்தின் தீர்ப்பையும், தனியரின் தன்னிலை விளக்கம் மற்றும் மேல் விளக்கங்களை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தனது கருத்தை தெரிவித்ததாக தெரியவில்லை. எனவே, தமிழ்நாடு அரசு பணியாளர்

தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு பத்து ஆண்டுகளாக (01.02.2002 முதல் 02.02.2012 வரை) தன்னிச்சையாக பணிக்கு வராமல் இருந்த நிரூபணமான குற்றச்சாட்டிற்காக தனியருக்கு வழங்க உத்தேசித்திருந்த ''கட்டாய ஓய்வு'' என்னும் தண்டனையை உறுதி செய்து, அவ்வாறே, அரசு ஆணை (ப) எண். 440, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டி2) துறை, நாள் 17.03.2016–ன் மூலம் ஆணை பிறப்பித்துள்ளது.

XXXXX

வழக்கு- VII

முன்னாள் காவல்துறை ஆய்வாளர்கள் திருவாளர்கள் வி.எம்.முருகையன் (குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்-1) மற்றும் P. இராமலிங்கம் (குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்-2) மற்றும் முன்னாள் காவல்துறை உதவி ஆய்வாளர் R. மதன்மோகன் (குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்-3) ஆகியோர் அரசு கடித (நிலை) எண். 493, உள் துறை, நாள் 19.03.1991 ல் விழிப்புப்பணி ஆணையத்தின் பரிந்துரைப்படி, ஊழல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு, தமிழ்நாடு அரசு ஒழுங்குமுறை நடவடிக்கை தீர்ப்பாயத்தின் முன்னிறுத்தப்பட்டனர்.

2. மேலே குறிப்பிட்ட மூன்று குற்ற அலுவலர்களில், இருவர் இறந்து விட்டனர். திரு.ஆர். மதன்மோகன், முன்னாள் உதவி ஆய்வாளரின் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை தீர்ப்பாய வழக்கு எண். 44/97–ல் குற்றச்சாட்டு திருச்சி, ஒழுங்குமுறை நடவடிக்கை ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டது.

3. திருச்சி ஒழுங்குமுறை நடவடிக்கை தீர்ப்பாய ஆணையர், அவர்கள் தனது விசாரணை அறிக்கை நாள்30.11.2001-ல் குற்ற அலுவலரின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு 'நிரூபணம் ஆகவில்லை' என்று தீர்ப்பளித்துள்ளார். ஆனால் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகம் ஒழுங்குமுறை நடவடிக்கை ஆணையரின் முடிவில் இருந்து மாறுபடுவதாக தெரிவித்து, ஆணையரின் முடிவினை மறுபரிசீலனை செய்து, குற்றவாளியின் குற்றத்திற்கேற்ப தக்க தண்டனை வழங்குமாறு அரசினைக் கோரியது. காவல்துறை இயக்குநர் தனது 04.08.2003 நாளிட்ட கடிதத்தில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தின் கருத்திற்கிணங்கி விதி எண். 10(a) தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறை நடவடிக்கை தீர்ப்பாயம்), 1955-ன் படி இறுதி ஆணை பிறப்பிக்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. இதனை தொடர்ந்து திரு.R. மதன்மோகன், முன்னாள் உதவி ஆய்வாளரிடம் குற்றச்சாட்டிற்கு 02.01.2006 அன்று விளக்கம் கேட்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட திரு.ஆர். மதன்மோகன், முன்னாள் உதவி ஆய்வாளர் தனது 12.03.2006 தேதியிட்ட மறுவிளக்க மனுவில், தன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு மறுப்பு தெரிவித்து குற்றச்சாட்டிலிருந்து தன்னை விடுவிக்குமாறு அரசிடம் கோரியதைத் தொடர்ந்து, அரசாணை (2D) எண் 839, நாள் 17.12.2007 நாளிட்ட அரசாணையில், பிழையாளரின் பணியிடை நீக்கம் திரும்பபெறப்பட்டு, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கைக்கு எந்தவித குந்தகமுமின்றி பணி ஓய்வு பெற அனுமதி அளித்து ஆணையிடப்பட்டது.

5. பின்னர் அவர் மீதான, துறை ஒழுங்கு நடவடிக்கை, தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978–ன் கீழ் தொடரப்பட்டு, ஒழங்கு நடவடிக்கை தீர்ப்பாணைய வழக்கு எண். 44/97-ல் ''ஓய்வூதியம் பிரதி மாதம் ரூ. 400/- வீதம், இரண்டு ஆண்டுகளுக்கு பிடித்தம் செய்யப்படும்'' என்ற தண்டனை வழங்க உத்தேசித்து, பிழையாளரின் ஒப்புதல் கோரப்பட்டது. ஆனால் பிழையாளர் ஒப்புதல் அளிக்காத காரணத்தினால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு 23.11.2008 அன்று கோரப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்

தேர்வாணையம் இவ்வழக்கினை ஆய்வு செய்து அன்னாருக்கு வழங்க உத்தேசிக்கப்பட்ட தண்டனையை கைவிடுமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

6. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கின் குற்றம், பிழையாளரின் விளக்கம், விசாரணை அலுவலரின் அறிக்கை, அரசின் மாறுபட்ட முடிவு மற்றும் அரசின் முடிவின் மீதான பிழையாளரின் முறையீடு ஆகியவற்றை பரிசீலனை செய்ததில், குற்றம் நடந்திருக்கலாம் என்கின்ற யூகத்தின் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கருத்திலிருந்து மாறுபட்டு மேற்படி பிழையாளரின் மனு நிராகரிக்கப்பட்டு, அன்னாரது "ஓய்வூதியம் பிரதி மாதம் ரூ 400/- வீதம், இரண்டு வருடங்களுக்கு பிடித்தம் செய்யப்படும்" என்று அரசாணை (2D) எண்: 111, உள் (காவல் 4A) துறை, நாள் 23.02.2015 ல் ஆணை வெளியிடப்பட்டது.

X X X X X

வழக்கு- VIII

தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955, விதி 17 (ஆ)–ன் கீழ் திரு.L.M.சந்திரசேகர், காவல்துறை துணை கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப்பிரிவு–2, தலைமையிடம், சென்னை த.ப.எண்.3/2010–ல் என்பவருக்கு எதிராக, 60 நாள் நீதிமன்ற காவலில் குற்றவாளியை வைத்து பிறகு உயரதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லாமை, குற்றவாளியின் சொத்துக்களை அடையாளம் காணாதது மற்றும் அவரை கைது செய்யாதது, புலனாய்வு செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாதது, காவல் கண்காணிப்பாளரின் அழைப்பை ஏற்காதது மற்றும் அதனை தொடர்ந்து விடுப்பில் சென்றது ஆகிய காரணங்களுக்காக குற்றச்சாட்டுக்கள் (6 குற்றச்சாட்டுக்கள்) தொடுக்கப்பட்டன.

2. விசாரணை அலுவலர், திரு.L.M.சந்திரசேகர், காவல்துறை துணை கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப்பிரிவு–2, தலைமையிடம், சென்னை என்பவருக்கு எதிராக த.ப.எண்.3/2010–ல் தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு 1,2,3 மற்றும் 6 ஆகியவற்றை "நிரூபணமாகவில்லை" என்றும் குற்றச்சாட்டு 4 "பகுதியளவு நிரூபணமாகிறது" மற்றும் குற்றச்சாட்டு 5 "நிரூபணமாகிறது" என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட குற்றச்சாட்டுகள், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தற்காப்பு விளக்கம், விசாரணை அதிகாரியின் அறிக்கை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம் ஆகியவற்றை தொடர்புடைய ஆவணங்களுடன் தீவிர பரிசீலனை செய்து, குற்றச்சாட்டுக்கள் 4 மற்றும் 5 ஆகியவற்றை "நிரூபணமாகிறது" என முடிவு செய்து அன்னாருக்கு "கட்டாய ஓய்வு" எனும் தண்டனையை வழங்க அரசால் உத்தேச முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக, தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகள் 1954, விதி 18 (1)–ன் கீழ் குறிப்புரை கோரப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்கிய குறிப்புரையில் மேற்கண்ட அரசால் உத்தேசிக்கப்பட்டுள்ள "கட்டாய ஓய்வு" எனும் உத்தேச தண்டனை அதிகப்படியாகவும் அளவுக்கு மீறியதாகவும் இருப்பதனாலும், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் ஏற்கனவே 31.12.2013 அன்று ஓய்வு பெறும் தேதியினை எட்டியுள்ளதனாலும் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் மீது தமிழ்நாடு ஓய்வு ஊதிய விதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

5. இது தொடர்பாக, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் மீதான குற்றம் அவரது கடமை தவறிய செயலினை விளக்கி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் குறிப்புரை மீண்டும் கோரப்பட்டது. ஆனால் தேர்வாணையம் தனது முந்தைய குறிப்புரையினை அறிவுறுத்தி அரசுக்கு ஆலோசனை வழங்கியது.

6. அரசு, இந்நேர்வில் தொடர்புடைய ஆவணங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையினையும் நன்கு பரிசீலனை செய்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையிலிருந்து மாறுபட்டு அரசின் முந்தைய முடிவினை உறுதிபடுத்த முடிவெடுத்தது. அதன்படி, அரசால் தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955, விதி 17 (ஆ)–ன் கீழ் திரு.LM.சந்திரசேகர், காவல் துணை கண்காணிப்பாளர், பொருளாதார குற்றப்பிரிவு–2, தலைமையிடம், சென்னை என்பவருக்கு எதிராக த.ப.எண்.3/2010–ல் "கட்டாய ஓய்வு" எனும் தண்டனை வழங்கி அரசாணை (2டி) எண்.402, உள் (காவல்.2) துறை, நாள். 22.8.2016–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

X X X X X

<u>வழக்கு- IX</u>

தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955, விதி 17 (ஆ)–ன் கீழ் திரு.P.முருகேசன், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் (தற்காலிக பணி நீக்கம் மற்றும் ஓய்வு பெற அனுமதி மறுக்கப்பட்டது), பழனி உட்கோட்டம், திண்டுக்கல் மாவட்டம் (முன்னாள் காவல் ஆய்வாளர், ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்) என்பவருக்கு எதிராக கடவுச்சீட்டு கோரி விண்ணப்பித்திருந்த விண்ணப்பத்தில் கள விசாரணை செய்யாமலும் விண்ணப்பித்த நபரின் அடையாளத்தை சரியாக உறுதிப்படுத்தாமலும் தவறான விசாரணை அறிக்கையைக் கொடுத்ததன் பேரில் ஏ.எம்.அப்துல் காதர் என்ற போலியான நபருக்கு கடவுச்சீட்டு வழங்கக் காரணமாக இருந்ததற்காக த.பஎண்.11/2011–ல் குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டது.

2. விசாரணை அலுவலர், திரு.P.முருகேசன், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் (தற்காலிக பணி நீக்கம் மற்றும் ஓய்வு பெற அனுமதி மறுக்கப்பட்டது), பழனி உட்கோட்டம், திண்டுக்கல் மாவட்டம் (முன்னாள் காவல் ஆய்வாளர், ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்) த.ப.எண்.11/2011–ல் என்பவருக்கு எதிராக தொடுக்கப்பட்ட குற்றச்சாட்டு "நிரூபணமாகிறது" என்று தெரிவித்தார்.

3. மேற்கண்ட குற்றச்சாட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் தற்காப்பு விளக்கம், விசாரணை அதிகாரியின் அறிக்கை மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலரின் கூடுதல் விளக்கம் ஆகியவற்றை தொடர்புடைய ஆவணங்களுடன் தீவிர பரிசீலனை செய்து, குற்றச்சாட்டு "நிரூபணமாகிறது" என முடிவு செய்து அன்னாருக்கு "கட்டாய ஓய்வு" எனும் தண்டனையை வழங்க அரசால் முடிவு எடுக்கப்பட்டது. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறை, 1954, விதி 18 (1) (b) (iii)–ன் கீழ் அதன் குறிப்புரை கோரப்பட்டது.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வழங்கிய குறிப்புரையில் குற்ற அலுவலர் 32 ஆண்டுகள் தண்டனையில்லாத அப்பழுக்கற்ற காவல் பணி புரிந்துள்ளதையும், ஆற்றியுள்ள பல்வேறு பணிகளைப் பாராட்டி 47 விருதுகள் பெற்றுள்ளதிலிருந்தும், அன்னார் சாதாரணமாக ஓய்வு பெறும் நிலையில் (30.9.2011) ஓய்வு பெற அனுமதியாமல் தற்காலிக பணிநீக்கம் செய்து நாளது தேதிவரை பணிநீட்டிப்பில் வைத்திருப்பதே பெரிய தண்டனையாக தேர்வாணையம் கருதுவதால் அரசின் உத்தேச முடிவான கட்டாய ஓய்வு என்ற தண்டனை அதிகப்படியாக உள்ளதால் அன்னாரை ஓய்வு பெற அனுமதித்து, ஓய்வூதிய விதிகளில் தண்டனை வழங்கலாம் என தேர்வாணையம் அரசுக்கு ஆலோசனை வழங்குகியது.

5. அரசு இந்நேர்வில் தொடர்புடைய ஆவணங்களையும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையினையும் நன்கு பரிசீலனை செய்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குறிப்புரையிலிருந்து மாறுபட்டு அரசின் முந்தைய முடிவினை உறுதிபடுத்த முடிவெடுத்தது. அதன்படி, தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்கு மற்றும்

மேல்முறையீடு) விதிகள், 1955, விதி 17 (ஆ)–ன் கீழ் திரு.P.முருகேசன், காவல்துறை துணை கண்காணிப்பாளர் (தற்காலிக பணி நீக்கம் மற்றும் ஓய்வு பெற அனுமதி மறுக்கப்பட்டது), பழனி உட்கோட்டம், திண்டுக்கல் மாவட்டம் (முன்னாள் காவல் ஆய்வாளர், ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்) என்பவருக்கு எதிராக த.ப.எண்.11/2001–ல் ''கட்டாய ஓய்வு'' எனும் தண்டனை வழங்கி அரசால் அரசாணை (2டி) எண்.24, உள்(காவல்.2) துறை, நாள். 23.1.2017–ல் ஆணைகள் வெளியிடப்பட்டன.

XXXXX

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.



TNPSC - கலந்தாய்வுக்கு முன்பு சான்றிதழ் சரிபார்த்தல்.



TNPSC - கலந்தாய்வு முடிந்து துறை மற்றும் பதவியை விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள்.



மாற்றுத்திறனாளிகள் கலந்தாய்வின் போது கலந்து கொள்ளும் காட்சி.



TNPSC - கலந்தாய்வுக்கு முன்பு சான்றிதழ் சரிபார்த்தல்.



TNPSC - கலந்தாய்வு முடிந்து துறை மற்றும் பதவியை விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கின்றார்கள்.


தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
ப்ரேஸர் பாலச்சாலை,
வ.ஊ.சி. நகர், சென்னை – 600 003
www.tnpsc.gov.in/contacttnpsc@gmail.com



அச்சிட்டோர் அரசு மைய அச்சகம், சென்னை–600 079.